Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 புரட்டாதி 02 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷஃபான் 02 (18.09.2004) சனிக்கிழமை இதழ் :352

MANOJ AIR TRAVELS

MANOJ EXPRESS

The Finest Express Service in the Field

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும்
பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

இல. 13, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(021 222 3916, 0777 801038

(சி/2485)

## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் நிதி ஒதுக்கீடுகள் குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)



பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதிப்பகிர்வு தொடர்பான மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் யாழ்.செயலகத்தில் நேற்றுமுதல் நடைபெற்றுவருகிறது.

யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுக்காலை 9 மணிக்கு ஆரம்பமான இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மா.க.ஈழவேந்தன், சிவாஜிலிங்கம், சுரேஸ்பிரேமச்சந்திரன், சிவநேசன், மாவைசேனாதிராஜா, ரவிராஜ் போன்றோரும். யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் உள்ளிட்ட யாழ்.செயலக மற்றும் மாவட்டத்திலுள்ள திணைக்களங்கள் அதிகாரசபைகள், கூட்டுத்தாபனங்கள் பொது நிறுவனங்கள் பொதுமக்கள் சேவை அமைப்புகளின் தலைவர்கள் செயலாளர்கள் முகாமையாளர்கள் போன்றோரும் கலந்துகொண்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகை ஆசிரியர்களுடன் எரிக் சொல்ஹெய்ம் சந்திப்பு

(கொழும்பு)

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நேற்று கொழும்பில், சிங்கள மற்றும் தமிழ் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.

கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் சிங்கள ஊடகங்களான லங்காதீப மற்றும் லக்பிம பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்களும், தமிழ் ஊடகங்களான தினக்குரல் மற்றும் சுடர் ஒளி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

தனது இந்த விஜயத்தின்போது, ஜே.வி.பியின் தலைவரை தன்னால் சந்திக்க முடியாமற்போய்விட்டதாக சொல்ஹெய்ம் தெரிவித்தார். அத்துடன் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் அரச படையினருடன் இணைந்து செயற்படும் ஆயுதக்குழுக்களின் நடவடிக்கைகளை அரசாங்கம் கட்டுப்படுத்த வேண்டும் எனவும் அதுபோல விடுதலைப் புலிகளால் நடத்தப்படும் அரசியற் படுகொலைகளை அவர்களும் நிறுத்தவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையே உள்ள சிறியதொரு சமரச முயற்சி தயாரிப்பு இழுபறியே சமாதான முயற்சியை மீள ஆரம்பிப்பதற்குத் தடையாகவுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்வதிலுள்ள முட்டுக்கட்டைகள் தொடர்பாக அரசும் புலிகளும் எடுக்கும் நடவடிக்கைகள் மிகக் குறைவாகவே உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கிழக்கு நிலைமைகள் குறித்து ஆராய படையினர்-புலிகள் புதனன்று சந்திப்பு

## கனேடியத் தூதரகக் குழு கிளிநொச்சி வருகின்றது

(கொழும்பு)

கனேடியத் தூதரக அதிகாரிகள் குழுவொன்று எதிர்வரும் 20 ஆம் திகதி கிளிநொச்சிக்கு விஜயம்செய்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் கனேடியத் தூதுக் குழுவினர், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்துவர்.

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் வலேரியா றெய்மன் தலைமையிலான இந்தக் குழுவினர், தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பின்போது, சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலைமை குறித்தும் விரிவாக

## கண்காணிப்புக்குழு ஏற்பாடு

(மட்டக்களப்பு)

**கிழக்கு மாகாண பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இராணுவ அதிகாரிகளுக்குமிடையிலான சந்திப்பு எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமையன்று நடைபெறவிருப்பதாகத் தெரியவருகிறது.**

**மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் விடுதலைப் புலிப் போராளிகள் மீது திட்டமிட்டு நடத்தப்படும் தாக்குதல் சம்பவங்களை அடுத்து – இத்தகைய சந்திப்புக்களில் இருந்து விடுதலைப் புலிகள் கடந்த ஜூன் மாதம் விலகிக்கொண்டனர்**

கடந்தமாத இறுதியில் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் டொன் புறூவ் ஹொவ்டே மட்டக்களப்புக்குச் சென்று விடுதலைப் புலிகளுடனும் இராணுவத்தினருடனும் தனித்தனியாகச் சந்தித்து பேச்சுவார்த்தையினை மேற்கொண்டதையடுத்து இந்தச் சந்திப்பு மீண்டும் இடபெறவிருந்த போதிலும் இரண்டு தடவைகள் ஒத்திவைக்கப்பட்டது.

கிளிநொச்சிக்குச் சென்றிருந்த மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட

இந்தச் சந்திப்பில் இராணுவத் தரப்பில் 23 ஆவது டிவிசன் தளபதி பிரிகேடியர் விஜித குணவர்த்தன தலைமையில், வாழைச்சேனை மற்றும் மட்டக்களப்பு பிரிகேட்களின் கட்டளை அதிகாரிகள் உட்பட சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தரப்பில் கேணல் ரமேஷ், ராம், ரமணன்,

களின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்துவர்.

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் வலேரியா றெய்மன் தலைமையிலான இந்தக் குழுவினர், தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பின்போது, சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலைமை குறித்தும், நிதியுதவிகள் குறித்தும் முக்கியமாக ஆராயப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

கடந்தமாத இறுதியில் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் டொன் புறுாவ் ஹொவ்டே மட்டக்களப்புக்குச் சென்று விடுதலைப் புலிகளுடனும் இராணுவத்தினருடனும் தனித்தனியாகச் சந்தித்து பேச்சுவார்த்தையினை மேற்கொண்டதையடுத்து இந்தச் சந்திப்பு மீண்டும் இடம்பெறவிருந்த போதிலும் இரண்டு தடவைகள் ஒத்திவைக்கப்பட்டது.

கிளிநொச்சிக்குச் சென்றிருந்த மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் நேற்றுமுன்தினம் மட்டக்களப்புக்கு திரும்பியதையடுத்தே, எதிர்வரும் புதன்கிழமை வவுணதீவு யுத்த சூனியப் பிரதேசத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இந்தச் சந்திப்பில் இராணுவத் தரப்பில் 23 ஆவது டிவிசன் தளபதி பிரிகேடியர் விஜித குணவர்த்தன தலைமையில், வாழைச்சேனை மற்றும் மட்டக்களப்பு பிரிகேட்களின் கட்டளை அதிகாரிகள் உட்பட சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தரப்பில் கேணல் ரமேஷ், ராம், ரமணன், கௌசல்யன் போன்றோருடன் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட பிராந்திய தளபதியாக கடந்தவாரம் பொறுப்பேற்ற கேணல் பானுவும் இந்தச் சந்திபிப்பில் பங்கேற்கலாம் என மட்டக்களப்புத் தகவல்கள் தெரிவித்தன.

# ரணிலுடன் பேச்சு நடத்திய பின் சொல்ஹெய்ம் நாடு திரும்பினார்



(கொழும்பு)

நோர்வேயின் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்று மாலை சந்தித்துக் கலந்துரையாடினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் கலந்துகொண்டார்.

இந்தச் சந்திப்பின்போது, சமாதானப் பேச்சுக்களின் தற்போதைய நிலை குறித்தும் அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்காக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் என்பன தொடர்பாகவே கலந்துரையாடப்பட்டதாக தெரியவருகிறது.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் உடனடியாக பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக அதிககவனம் செலுத்தப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் தெரிவித்தது.



தமது விஜயத்தின்போது, தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் ஜனாதிபதியின் தரப்பு ஆகியவற்றுடன் நடத்திய பேச்சுக்கள் குறித்தும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சொல்ஹெய்ம் விளக்கம் அளித்தார். இதன்போது ஒஸ்லோ பிரகடன அடிப்படையில் தமது கட்சி தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவளிப்பதாக ரணில் விக்கிரமசிங்க சொல்ஹெய்மிடம் மீண்டும் வலியுறுத்தியதாகவும் - எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் தெரிவித்தது.

நோர்வேயின் சமாதானத் தூது (12 ஆம் பக்கம் பார்க்க)

**மக்கள் அனைவரும் எழுச்சி அடைவார்களாயின் தமிழீழம் உருவாகுவதை யாராலும் தடுக்க முடியாது.**

- தியாகி லெப்.கேணல் திலீபன்



# சட்டவிரோதமாக லண்டனுக்கு செல்லமுயன்ற 31 பேர் கைது!

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் இங்கிலாந்து செல்ல முற்பட்ட 26 தமிழர்கள் உட்பட 31 பேர் நேற்றுமுன்தினம் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குற்றப்புலனாய்வுத்துறையினரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இவர்களில், 13 ஆண்களும், 12 பெண்களும், 6 சிறுவர்களும் அடங்குவதாக குற்றப் புலனாய்வுத்துறை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

குறிப்பிட்ட பயணிகள் இலங்கை நேரப்படி நேற்றுமுன்தினம் காலை 7.30 மணிக்கு மாலைதீவுக்குப் புறப்படவிருந்த ஏயார் லங்கா விமானத்தில் பயணம் செய்வதற்கான பயணச் சீட்டுக்களை பெற்றுக்கொண்டு காலை 6.45 மணிக்கு இங்கிலாந்துக்குப் புறப்படவிருந்த ஏயார் லங்கா விமானத்தில் ஏறி அமர்ந்திருந்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)




எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

# முகமாலை, ஓமந்தை சோதனைச் சாவடிகளில் மிதிவெடி அகற்றுவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தினால்; மின் இணைப்பு வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன!

(யாழ்ப்பாணம்)

ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியில் மின்சாரம் வழங்கும் இலங்கை மின்சார சபையின் திட்டம் - அந்தப்பகுதிகளில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் அகற்றும் நடவடிக்கைகளில் ஏற்பட்ட காலதாமதத்தினால் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கும் திட்டம் தொடர்பான நிதியுதவியினை ஐரோப்பிய ஒன்றியத் திடம் இலங்கை மின்சாரசபை கேட்டதற்கிணங்க, அவர்கள் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிகளுக்குள் இந்த வேலைகளை முடித்துத் தந்தால் நிதி தருவதாக ஒப்புதல் அளித்திருந்தனர்.

அது விடயமாக இலங்கை மின்சாரசபை, தற்போது இராணுவத்தினரின் ஓமந்தை சோதனைச் சாவடி வரை மின் வழங்கலுக்கான ஆரம்ப வேலைகளைப் பூர்த்தி செய்து விட்டனர்.

இருப்பினும், ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடி தொடக்கம், புளியங்குளம் விடுதலைப்புலிகளின் சோதனைச்சாவடிக்கும் இடைப்பட்ட பகுதிகளில் காணப்பட்ட கண்ணிவெடிகளை அகற்றுதல் தொடர்பான செயற்திட்டங்களினால் காலம் வீணடிக்கப்பட்டதால், இந்த மின் வழங்கலுக்காக நிதிவழங்க முன்வந்த ஐரோப்பிய ஒன்றியம் அந்த நடவடிக்கையை நிறுத்தியுள்ளது.

தற்போது, நிதியின்மையினால் இந்தச் செயற்பாடு இடைநிறுத்தப்பட்டாலும், இந்தப்பிரதேசங்களுக்கு விரைவில் முழுமையான மின்சாரம் கிடைக்க ஏற்பாடு செய்வதாக இலங்கை மின்சாரசபையின் பொது முகாமையாளர் செ.கமலநாதன் தெரிவித்தார்.

# யாழ்.குடாநாட்டிலுள்ள பிரதேச செயலர்களுக்கு மனித உரிமைகள் கருத்தரங்கு

யாழ்.குடாநாட்டிலுள்ள பிரதேச செயலர்களுக்கு மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு நாளை காலை 10 மணிக்கு யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ஆர்.சந்திரசேகரா தலைமையில் நடைபெறும். இதில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் எஸ்.பத்மநாதன் கலந்துகொள்வார்.

இதில், மனித உரிமைகள் தொடர்பாக அரச அதிகாரிகளுக்கு மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகளால் நீண்ட விளக்கம் அளிக்கப்படும். மனித உரிமைகள் மீறப்படும்போது, அவற்றிற்கு எப்படித் தீர்வு காண்பது என்பது தொடர்பாகவும் கருத்துக்களை வழங்கவுள்ளனர்.

# திலீபனின் நினைவு நாள் நிகழ்வு எழுச்சியுடன் அனுஷ்டிப்பு!

தியாகதீபம் லெப் - கேணல் திலீபனின் 17ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் வடமராட்சி கிழக்கு மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேசங்களில் எழுச்சிபூர்வமாக நடைபெற்று வருகின்றன.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சகல அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், பாடசாலைகள், பொது ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் முன்பக்க வீதிகள் சிவப்பு, மஞ்சள், நீல நிறக்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு தியாகி திலீபனின் திருவுருவப் படத்துக்கு ஈகச்சுடர் ஏற்றும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

பச்சிலைப்பள்ளி பிதேசத்தில் பளை பட்டினப்பகுதி முழுவதும் வீதியோரங்கள்தோறும், சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், பாடசாலைகள் ஆகியவை அலங்கரிக்கப்பட்டதுடன், தியாகி திலீபனின் திருவுருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து ஈகச்சுடர் ஏற்றும் நிகழ்வுகள் இடம்பெற்றன. (21)

# எஸ்.எல்.ஏ.எஸ் பரீட்சை நாளை கொழும்பில்!

அரசாங்கச் சேவையிலுள்ள அதிகாரிகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சை நாளை திட்டமிட்டபடி கொழும்பில் நடைபெறவுள்ளது. இந்தப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. எனினும், உரிய ஏற்பாடுகளைச் செய்வதற்கு காலம் போதாமையால், இது கொழும்பிலேயே நடத்தப்படவுள்ளது.

## அறிவித்தல்

### யாழ்.மாவட்ட நீதிமன்றம்

லொயலா செல்வச்சீராளன்,
இல.41, மத்தியூஸ் றோட்,
யாழ்ப்பாணம்.

வழக்காளி

வழ. இல. மணநீக்கம்/277

எதிராக

லொயலா செல்வச்சீராளன்,
பெண் பிறின்சியா,
வயா அன்ரோனியா,
வெளிசியானோ 110,
90100 பலர்மோ பா,
இத்தாலி.

எதிராளி

**மேற்சொல்லப்பட்ட வழக்காளிக்கு, லொயலா செல்வச்சீராளன் 41, மத்தியூஸ் றோட், யாழ்ப்பாணம்**

எதிராளியின் சார்பில் சட்டத்தரணி ந.ரவிராஜ் அவர்கள் பதில் அற்றோணித் தத்துவப்பத்திரம் ஆகியவற்றை நகர்த்தல் பத்திரத்துடன் அணைத்து இவ்வழக்கை 14.05.2004 ஆகரிப்பதற்காக மன்றில் கூப்பிடப்பட்டு மன்றின் அனுமதியுடன் எதிராளியின் சட்டத்தரணியால் சமர்ப்பணம் செய்யப்பட்ட பின்னர், எதிராளிதரப்பு சட்டத்தரணியின் சமர்ப்பணத்தை ஏற்றுக்கொண்டு பாசீலித்து இவ்வழக்கில் 12.12.2002ல் எதிராளி இவ்வழக்கில் மறுமொழி அணைக்காது எதிராளியும் சமுகம் இல்லாத காரணத்தினால் 02.01.2003ந்து ஒருமுக விளக்கத்திற்காக திகதி இடப்பட்டு இருந்தும் அன்றையதினம் வழக்காளியோ வழக்காளியின் பதிவு பெற்ற சட்டத்த ரணியோ சமுகம் இல்லாதகாரணத்தினால் கட்டளை இல்லை எனக் குறிப்பிடப்பட்டதை வழக்கேட்டுள் அவதானித்து 12.12.2002ல் ஒருமுக விளக்கத்திற்கு இடப்பட்ட கட்டளை வலுவிழப்புள்ளது என்பதை இட்டு மன்று திருப்தியடைவதால் எதிராளித் தரப்பில் கோரியதற்கு அமைய அறிவித்தலை தினக்குரல், வலம்புரி, உதயன், நமது ஈழநாடு ஆகிய பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தி பதில் சேவை செய்யுமாறு 15.092004ல் கட்டளை இட்டுள்ளபடியால்,

வழக்காழியாகிய நீர் ஏன் மேற்கூறியவற்றை ஏற்றுக்கொள்ளக்கூடாதென்பதற்கு காரணம் காட்ட இருப்பின் 2004ம் ஆண்டு புரட்டாதி மாதம் 27ம் திகதி காலை 9.00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன் தோன்றி தெரிவிக்குமாறு இத்தால் உமக்கு அறிவித்தல் தரப்படுகின்றது.

2004ம் ஆண்டு புரட்டாதி மாதம் 16ம் திகதி

நீதிமன்றக்கட்டளைப்படி.

து.சிறீமோகன்,
பதிவாளர்.

(935)

# தெல்லிப்பளை கூட்டுறவு சங்கத்தில் நாளை கூட்டுறவுப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கத்தின் கூட்டுறவு பெருவிழா நாளை முற்பகல் 9.30 மணிக்கு துர்க்கா புரத்தில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் சி.சிவமகாராசா தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் -

அரசாங்க அதிபர் செ.பத்மநாதன், வடக்கு -கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் இ.இளங்கோவன் ஆகியோர் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பருதி, யாழ். மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் சி.விஜிதரன், வலி.வடக்கு பிரதேச செயலர் முரளிதரன், யாழ். கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் கனகசபாபதி, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ. சிவலிங்கம் (கணக்காய்வுப் பிரிவு), கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி.ஜயாத்துரை (பனை, தென்னை வளம்).

மக்கள் வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் சி. இளம்பிறைநாதன், வடபிராந்திய முகாமையாளர் சி. சிவபாதவிருதையர், கூட்டுறவுச் சபைத்தலைவர் பொ.கனகசபாபதி, கிராமிய வங்கிகளின் சமாசத் தலைவர் சி. குமாரவேல், விவசாய உள்ளீடு நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் ப.கனகலிங்கம், சிக்கன கடன் உதவிக் கூட்டுறவுச் சங்கத்தின் சமாசத் தலைவர் க.சிவசுப்பிரமணியம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும்,

தேசிய கூட்டுறவுச் சபையின் தலைவர் பந்து ரணவாக்க, பொல்கொல்லை, கூட்டுறவு கல்லூரி பணிப்பாளர் நாயகம் உதய ரஞ்ஜித் செனவிரத்ன ஆகியோர் கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்வர்.

க.கந்தசாமி, க.தவராசா, க. வேலாயுதம், சு.பாலச்சந்திரன், க. விக்கினேஸ்வரன், க.வயிரவன், மு.பாரதிதாசன், சி.பாலகுருநாதன், கா.மகேந்திரன், வி.பொன்னுத்துரை, க.சுப்பிரமணியம், திருமதி. சி.பரமேஸ்வரி, ப.பாலகிருஷ்ணன், த. செல்லத்துரை, ச.முத்துக்குமாரு, ச. செந்தில்வேல், மு.சிவப்பிரகாசம், ஆ.சி.நடராசா, சு.கதிரேசு, க.சின்னத்தம்பி, சி.சுப்பிரமணியம், ச.தனபால சிங்கம், வே.துரைச்சாமி, க.செல்லப்பா ,வே.மாணிக்கன் பொ.கோபலகிருஷ்ணன் ,மா. நாகேந்திரசீலன், எ.தேவதிரவியம், க.தங்கராசா, க.தம்பிராசா, மு. வெள்ளைத்தம்பி, வ.செல்லத்துரை, க.மாணிக்கம், க.துரையன், ஆகிய கூட்டுறவாளர்களுக்கு விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

க.அமரசிங்கம் (பதில் ஆளணி முகாமையாளர்), க.இராசதுரை (பதில் வர்த்தக முகாமையாளர்), திருமதி.த.பூரணம், (பதில் கணக்காளர்), சி.முருகையா (சாரதி), க. சசிதரன், (எழுதுவினைஞர்), சி. இரத்தினசிங்கம் (காவலாளி), சி. நாகேந்திரம் (காவலாளி), நா.நவரத்தினம்(கிளைமுகாமையாளர்), அ. வேல்முருகானந்தன் (கிளைமுகாமையாளர்), மா.நடராசா (பதில் கிளைமுகாமையாளர்), த.கனேசமூர்த்தி (கிளை முகாமையாளர்), க.மோகன் (விற்பனையாளர்), ந.சகாதீசன் (விற்பனையாளர்) ஆகியோர் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.



வடமராட்சி கிழக்கு பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க தலைமைப் பணிமனை திறப்பு விழாவில் - கட்டிடப்புலிகளின் விசேட தளபதி கேணல் சூசை உரையாற்றுவதையும், தளபதி லெப். கேணல் மங்களேஸ், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ் ஐயாத்துரை, வடமாகாண பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.வரதராசா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம். (21)

## சர்வதேச சிறுவர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு நாளை காலை 9.30 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டிலிநிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுக்கு, யாழ்.மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். சிறுவர் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற வர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

## மருதங்குளம் விநாயகர் மஹோற்சவ நிகழ்வு

எழுதுமட்டுவாள் - மருதங்கேணி அருள்மிகு ஸ்ரீ மஹா கணபதிப் பெருமான் தேவஸ்தான மஹோற்சவ பெருவிழா நாளை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில், 25 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 26 ஆம் திகதி சப்பறத்திருவிழாவும், 27 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

ஆலய மஹோற்சவ விழாக்கள் ஆலய அர்ச்சகர் சிவஸ்ரீ. வேலாயுதபிள்ளை ஐயர் தலைமையில் நடைபெறும்.

## விநாயகர் சதுர்த்தி

அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் விநாயக சதுர்த்தி விழா இன்று சிறப்பாக நடைபெற இருக்கிறது.

எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஏகாதசி விரதபூசையும், மிகச்சிறப்பாக நடைபெறவுள்ளது.

இரு தினங்களிலும் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் நடைபெற இறுதியில் ஸ்ரீமத் நாராயணர் தேவியிருவருடன் வீதியுலா எழுந்தருள்வார். (206)


## சிறு விளம்பரம்

### ஆங்கிலம்

2004 டிசம்பர் O/L பரீட்சைக்குரிய ஆங்கில Revision and Paper Class ஒய்வுபெற்ற ஆங்கில ஆசிரியரினால் நடத்தப்படும். 33, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி (தெற்கு), யாழ்ப்பாணம். (933)

### வேலை ஆட்கள் தேவை

பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு சந்தியில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் உணவகம் ஒன்றுக்கு அனுபவம் வாய்ந்த சமையல்காரர்கள், சாப்பாடு பரிமாறுபவர்கள் உடன் தேவை. பெண்களும் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு S.K.GYM, இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு. T.P 0773053063. (934)

றோஸ், ரசம், நன்னாரிரசம், நெல்லி ரசம், கிறேப் சர்பத், பஷன் ரசம், மிக்ஸ் புரூட் ரசம், அன்னாசி ரசம், தேசிக்காய் ரசம் ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள முகவரி கிறைன் டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ். இல: 777, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (C/3022)

நாகமஸ் சுன்னாகம்
20 ஆம் திகதி வரை
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.ப)

ராஜா யாழ்ப்பாணம்.
மதுர
காட்சிகள் 10.30, 2.30, 6.30. (பு.ப)
நாளை முதல் அர்ஜுன் நடித்த அரசாட்சி

திருமகள் சங்கானை
வசூல்ராஜா MBBS
Return to two moon junction
8.45 (பு.ப)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.ப)

### சமாதான முயற்சிகள் குறித்து

# அரசாங்கத்திடம் தெளிவான கொள்கை இருப்பது அவசியம்!

## ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்து



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கு முன்னர் - சமாதானப் பேச்சுத் தொடர்பாக தெளிவான ஒரு கொள்கையை அரசாங்கம் கடைப்பிடிக்கவேண்டுமென, ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பேசிய ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் கட்சியின் இந்த நிலைப்பாட்டை வெளியிட்டார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தொடர்பாக பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி பூரண ஆதரவை வழங்கும்.

இதன்பின்னர், இறுதித்தீர்வுக்கான தடைகள் குறித்து ஆராயலாம். அரசாங்கத்தில் ஒருமித்த கருத்து இல்லாதபோது ஏனைய கட்சிகளை சமாதான முயற்சிகளில் இணைத்துக்கொள்வது யதார்த்தமான செயலல்ல.

இடைக்கால நிர்வாகசபையை அடிப்படையாகக் கொண்டு சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு, அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் தமக்கிடையே ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்து, விரைவில் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்.

ரோக்கியோ மற்றும் ஒஸ்லோவில் அறிவிக்கப்பட்ட வகையில் இடைக்கால தன்னாட்சி நிர்வாக சபை அமையுமானால், அதனை ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் எதிர்க்காது. இடைக்கால நிர்வாக சபையை அடிப்படையாகக் கொண்டு சமாதானப்பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படுமானால், நாட்டின் அபிவிருத்திக்கு இயன்றளவு ஆதரவை ஐக்கிய தேசியக் கட்சி வழங்கும்.

இடைக்கால நிர்வாக சபையை அடிப்படையாக வைத்து சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதை ஜே.வி.பி. எதிர்த்தாலும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் - இடைக்கால நிர்வாகசபையை அடிப்படையாகக் கொண்டு சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும் எனத் தெரிவித்துள்ளது.

ஆனால், இடைக்கால நிர்வாக சபையை எதிர்ப்பதாகவும், தமது முடிவில் எந்த மாற்றமும் ஏற்படாது எனவும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டுக்கும் எமது நிலைப்பாட்டுக்கும் இடையில் முரண்பாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால், சமாதானப்பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளத் தயாரென நாம் கடந்த வருடமே அறிவித்துவிட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# 3 ஆம் தவணை விடுமுறைக்கு முன் பாடசாலை சீருடை, பாடநூல்கள் !

அரசாங்கப்படசாலை மாணவர்களுக்கான அடுத்த ஆண்டுக்குரிய இலவச பாடநூல், சீருடைகள் மூன்றாம தவணை விடுமுறைக்கு முன் வழங்கபடவிருப்பதாக தெரியவருகிறது.

எதிர்வரும் நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் இலவசப் பாடநூல்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பிரதிக் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பாட நூல்கள் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் முதலாம் தவணை ஆரம்பமாகி மாதங்கள் சில கடந்த பின்னரே பாடசாலை நூல்கள் வழங்கப்பட்டு வந்தன.

இந்த முறை 2 கோடி 20 லட்சம் புத்தகங்கள் அச்சிடப்படவிருப்பதுடன, 4 ஆயிரத்துக்கு மேற்பட்ட பாடசாலைகளில் விநியோகிக்கப்பட இருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# நாத்தாண்டிய பிரதேசசபை அரசாங்கத்தால் கலைப்பு !

(கொழும்பு)

புத்தளம் - நாத்தாண்டிய பிரதேசபை கலைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவிலான சுயேட்சை குழுவே நாத்தாண்டிய பிரதேச சபையில் பதவியில் இருந்துவந்தது.

இந்தப் பிரதேச சபையில் ஊழல்கள் இடம்பெற்றிருப்பதாகக் குற்றம் சுமத்தி, வடமேல் மாகாண சபையின முதலமைச்சர் அத்துல விஜயசிங்க நேற்று முன்தினம் இரவு சபையை கலைப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டார்.

அதேநேரம், நேற்று முன்தினம் மாலையளவில் பிரதேச சபையின் தலைவி ரமணி ஜசிந்தா தேனுவர தமது பதவியிலிருந்து விலகியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அண்மையில் இந்த பிரதேச சபையின் உறுப்பினர் நிலையில் இருந்து பொதுஜன ஐக்கிய முன்னணியின் 8 உறுப்பினர்கள் பிரதேச சபையில் ஊழல்கள் இடம்பெற்றிருப்பதைக் காரணம் காட்டி விலகியிருந்தனர். (01)

# அடையாள அட்டை விநியோகம் மேலும் துரிதமாக்கப்படவுள்ளது!

## ஆட்பதிவு ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆட்பதிவுத் திணைக்களத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஒரு நாளில் அடையாள அட்டை வழங்கும் சேவைமூலம் நாளாந்தம் 175 அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன என, ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளத் பீ.அபயக்கோன் தெரிவித்தார்.

இந்தத் தொகையை எதிர்காலத்தில் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்போம் என்று ஆணையாளர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

வடக்கு - கிழக்குப் பகுதியைச் சேர்ந்தவர்களே அதிகளவில் ஒரு நாள் சேவையில் அடையாள அட்டைகளைப் பெறுகின்றனர்.

ஒருநாள் சேவையை இதைவிடச் சிறந்த சேவையாக மாற்றியமைக்க நடவ டிக்கை மேற்கொள்ளும் அதேவேளை, நடமாடும் சேவைகளை நாடளாவிய ரீதியில் நடத்துவதற்கும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

இதன்மூலம் மேலும் அதிகளவில் அடையாள அட்டைகளை வழங்க முடியும். பாடசாலைகளில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு அடையாள அட்டைகளைத் துரித கதியில் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மின்சார கட்டணங்களை அதிகரிப்பதற்கு முடிவு !

(கொழும்பு)

மின்சார கட்டணங்களை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் கடந்த புதன்கிழமை கூடிய அமைச்சரவையில் மின்சார கட்டணங்களை அதிகரிப்பதற்கான யோசனையை மின்சக்தி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த முன்வைத்தார்.

30 இற்கு மேற்பட்ட மின்சார அலகுகளின் கட்டணங்களை அதிகரிப்பதற்கு அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த பரிந்துரை செய்த போதும், ஜனாதிபதி சந்திரிகா அதற்கு இணககம் தெரிவிக்கவில்லை.

அவ்வாறு கட்டணங்கள் அதிகரிக்கப்படுமானால், சுமார் 20 லட்சம் பாவனையாளர்கள் பாதிக்கப்படுவர். எனவே 91 அலகுகளுக்கும் 180 அலகுகளுக்கும் இடையிலான அலகுகளுக்கு 7 வீத அதிகரிப்பை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

அத்துடன், 180 இற்கு மேலான மின்சார அலகுகளுக்கான மின்சாரக் கட்டணங்கள் 4 வீதத்தால் அதிகரிக்கப்படவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

இதன் காரணமாக சுமார் 8 இலட்சம் பாவனையாளர்களே பாதிக்கப்படுவர் என, ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

இலங்கையில் 27 லட்சத்து 84 ஆயிரத்து 341 மின்பாவனையாளர்களில் 22 லட்சம் பேர் வீட்டு மின் பாவனையாளர்கள். 91 அலகு முதல 180 அலகுகள் வரை பாவிக்கப்படும் மின்சாரத்துக்கு இதுவரை அறவிடப்பட்டுவந்த ஒரு அலகுக்கான 10 ரூபா 60 சதக் கட்டணம் நவம்பர் மாதம் முதல் 11 ரூபா 40 சதமாக அதிகரிக்கப்படும்.

181 அலகுக்கு மேல் ஒவ்வொரு அலகுக்கும் இதுவரை அறவிடப்பட்டு வந்த 15 ரூபா 80 சதத்துக்குப் பதிலாக, 16 ரூபா 40 சதமாக கட்டணம் அதிகரிக்கப்பட இருக்கின்றது என்று மேலும் தெரியவருகிறது.

இதேவேளை, மேல் கொத்மலை நீர்மின் மையம் ஆரம்பிக்கப்படுவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ள போதும், அது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமையானது, மின்சக்தி பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளதாக இலங்கை மின்சார சபையின் முகாமையாளர் ரஞ்சித் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மேல் கொத்மலை மற்றும் நுரைச்சோலை அனல் மின்மையத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாதுவிட்டால் நாட்டில் பாரிய மின்சார நெருக்கடி நிலை ஏற்படும்.

மின்சார அலகு ஒன்றை உற்பத்திசெய்ய 9 ரூபா 50 சதம் செலவு ஏற்படுகிறது.

எனினும் அந்த அலகு பாவனையாளர்களுக்கு, 4 ரூபா 70 சதத்துக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதன் காரணமாக நாள் ஒன்றுக்கு மின்சார சபைக்கு 30 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுகின்றது. இதனை சீர் செய்யும் முகமாக மின்சார சபை விரைவில் சில மாற்றங்களை கொண்டு வரவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

## கூட்டமைப்பின் வரவு - செலவுத் திட்டம் சமர்பிக்கும் திகதி ஒத்திப் போகலாம்!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் திகதி சில தினங்களால் பின்தள்ளிவைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சுகளுக்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுவதில் ஏற்பட்டுள்ள தாமதமே இதற்கான காரணமாகும்.

இதேவேளை, வரவு செலவுத் திட்ட விவாத தினங்களும் குறைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் 8 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புதிய பொலிஸ்மா அதிபராக சந்திர பெர்னாண்டோ நியமனம்?

(கொழும்பு)

புதிய பொலிஸ்மா அதிபராக சந்திரா பெர்னாண்டோவை நியமிப்பதற்கு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசியலமைப்புச் சபைக்கு பரிந்துரைத்துள்ளார்.

பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றிய இந்திர டி சில்வா எதிர்வரும் 30 ஆம் திகதியுடன் ஓய்வு பெறவுள்ளதால்,

புதிய பொலிஸ்மா அதிபராக சந்திரா பெர்னான்டோவை நியமிக்கலாம் என்று, ஜனாதிபதி சந்திரிகா பரிந்துரை செய்துள்ளதாக, ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவித்தன.

அரசியலமைப்பின் தீர்மானத்துக்கு அமைய எதிர்வரும் முதலாம் திகதிமுதல் புதிய பொலிஸ்மா அதிபராக சந்திரா பெர்னாண்டோவை நியமிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# ஊழியர்களின் பிரச்சினையைத் தீர்க்க அமைச்சரவை உபகுழு நியமனம்

பல்கலைக்கழக ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலை நிறுத்தப் போராட்டத்தை நிறுத்தி, சம்பள முரண்பாடுகளைத் தீர்க்கும் வகையில் ஜனாதிபதியால் அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி பிரதி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன மற்றும் லால்கந்த ஆகியோர் அடங்கியதாக இந்த உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது.

கல்விசாரா ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளைத் தீர்ப்பது தொடர்பாக நேற்றுமுன்தினம் கல்வி அமைச்சில் நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்ததாகவும் தொழிற்சங்கக் குழுவின் இணைச் செயலாளர் சாந்த பண்டார தெரிவித்தார். (தே)

# மலையக இளைஞர்கள் பொலிஸ்படையில்; வடக்கு - கிழக்கு நிலைமை மோசமாகும்!

அரசாங்கத்தின் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மலையகத்தைச் சேர்ந்த ஆயிரம் இளைஞர், யுவதிகளை பொலிஸ் படைக்குச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் விடுத்திருக்கும் கோரிக்கையை, பரிசீலிக்கத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்திருக்கிறார்.

இ.தொ.காங்கிரஸ், அரசுக்கு ஆதரவளிக்க முன்வந்த நிலையில் மலையகத்தின் படித்த இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு விடயத்தில் கூடிய அக்கறை காட்டுமாறு ஜனாதிபதியிடம் வேலைவாய்ப்பு தொடர்பான கோரிக்கையை முன்வைத்தது. இந்தக் கோரிக்கை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டால், இவர்கள் அரசியல் தேவைகளுக்காக வடக்கு - கிழக்கு பிரதேசத்துக்கு அனுப்பப்பட்டால் இலங்கை அரசியல் நிலைமை மோசமடையலாம்.

இ.தொ.கா. மலையக இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புக் குறித்த கோரிக்கையை தீவிரமாகப் பரிசீலித்து முன்னுரிமை வழங்கத் தாம் தயாராக இருப்பதாகவும், அடுத்த சில வாரங்களில் இது குறித்து இ.தொ.காவுடன் பேச்சுநடத்த ஜனாதிபதி இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் செய்திகள் வெளியாகின.

அந்நிய சக்திகளின் தூண்டுதலில் ஆறுமுகம் தொண்டமான் - மலையகத் தமிழ் இளைஞர்களை யுத்தத்தில் ஈடுபடுத்தத் திட்டம் தீட்டியிருப்பதாக இணையத் தளத் தகவல் ஒன்று தெரிவித்தது.

# எதுவித விசாரணைகளுமின்றி நாட்டில் 40 ஆயிரம் குற்றவாளிகள்

நாட்டில் சுமார் 40 ஆயிரம் குற்றவாளிகள் எவ்வித விசாரணைகளும் இன்றி உலவுவதாகத் தெரியவந்துள்ளது. கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்யும் இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தில் கணினி வசதிகள் இல்லாமையால் இந்தநிலை ஏற்பட்டுள்ளதாக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

திணைக்களப் பதிவாளர் அபேரட்ண இது தொடர்பாக நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் தகவல் வெளியிட்டபோது -

குற்றங்கள் தொடர்பாக சுமார் 40 ஆயிரம் பேரது கைவிரல் அடையாளங்கள் பதியப்படவேண்டியுள்ளன. எனினும் கடந்த 10 வருடங்களாக கணினி வசதிகள் இன்மையால் அவற்றை மேற்கொள்ள முடியாமலுள்ளது.

இதுவரை நாடளாவிய ரீதியிலுள்ள நீதிமன்றங்களிலிருந்து சுமார் 4 இலட்சம் கைவிரல் அடையாளங்கள் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. இந்த அடையாளங்களிலேயே சுமார் 40 ஆயிரம் வரையில் கடந்த 10 வருடங்களாகப் பதியப்படாமல் இருந்துவருவதாகவும் அபேரட்ண தெரிவித்தார். (01)

ஈராக்கின் பலூஜா நகரில்

# அமெரிக்க விமானப்படையின் தாக்குதலில் 70 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பலி!



(பலூஜா)

அமெரிக்க விமானப்படையினர் ஈராக்கின் பலூஜா மற்றும் ரமாடி நகரங்கள் மீது நடத்திய விமானத் தாக்குதலில் 70 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதுடன், பலர் படுகாயமடைந்தனர்.

தமது விமானப்படையினரின் இலக்குத் தவறாத தாக்குதலால் அபு முசாப் அல் சர்காவியின் தலைமையிலான 70 கிளர்ச்சிவாதிகள் கொல்லப்பட்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

ஆனால், கொல்லப்பட்டவர்கள் அனைவரும் பொதுமக்களென சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்க விமானப் படையினரின் ஏவுகணைத் தாக்குதல்லால் மூன்று கட்டடத் தொகுதிகள் அழிக்கப்பட்டதாகவும், இவற்றுள் சர்கார்வியின் கிளர்ச்சிவாதிகள் ஆயுதங்களை மறைத்து வைத்து அதனைத் தமது ஆயுதக் களஞ்சியசாலையாக பாவித்து வந்ததாகவும் அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

இந்தத் தாக்குதலில் 44 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக ஈராக்கின் சுகாதாரத்துறை அமைச்சு தெரிவித்தது. வைத்தியசாலைத் தகவலின்படி - கொல்லப்பட்டவர்கள் அனைவரும் பொதுமக்களெனவும், அதனுள் பெண்கள் மற்றும் சிறுவர்களும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, கைபா நகரில் இரண்டு சக்திவாய்ந்த குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதில் பெருமளவு உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதலாவது கார்க் குண்டுத் தாக்குதலெனவும், இந்தக் கார் ரைகிறிஸ் நதிக்கரைப் பக்கமாகவுள்ள காவலரணை நோக்கி செலுத்தப்பட்டு தற்கொலையாளிகளால் வெடிக்கவைக்கப்பட்டதாகவும், இரண்டாவது தாக்குதல் கடைத் தொகுதிகள் அமைந்த பகுதியில் நடத்தப்பட்டதாகவும், பாக்தாத்தில் உள்ள பி.பி.சி செய்தியாளரான மைக் டொன்கின் தெரிவித்தார்.

இதேவேளை, ஈராக்கின் மேற்குப் பகுதியிலுள்ள அன்பர் மாகாணத்தில் இடம்பெற்ற தாக்குதல் ஒன்றில் மூன்று அமெரிக்க கடற்படையினர் கொல்லப்பட்டனர். நடவடிக்கை ஒன்றில் படையினர் ஈடுபட்டிருந்த வேளையிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் சம்பவ இடத்திலேயே ஒருவர் கொல்லப்பட்டதாகவும், மற்றைய இருவரும் இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தாக்குதலை அமெரிக்க இராணுவமும் உறுதிப்படுத்தியுள்ளது.



இதனிடையே ஈராக்கின் திக்றிற் நகரில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் சாக்கு மூடையொன்றிலிருந்து மீட்கப்பட்ட உடல்கள் தொடர்பாக அவுஸ்ரேலியா விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.



இந்த உடல்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டியுள்ளதாகவும், ஏனெனில் இரண்டு அவுஸ்ரேலிய துருப்பினரை இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகள் முன்னர் கடத்தியதாகத் தெரிவித்திருந்தனர் எனவும் அவுஸ்ரேலிய அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, பாக்தாத்தின் மன்சூர் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் கடத்தப்பட்ட தனது நாட்டு பிரஜைகள் இருவரது பெயரையும், ஈராக்கிலுள்ள அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ளது.

இவர்கள் ஜக் ஹென்ஸ்லி மற்றும் கியூக்னி ஆம்ஸ்றோங் என அந்தத் தூதரகம் தெரிவித்துள்ளது. ஆனால் பிரிட்டன் தனது நாட்டுப் பிரஜை தொடர்பாக எவ்வித தகவலையும் வெளியிடவில்லை.

# 17 மாணவர்களின் காதுகளை வெட்டி எறிந்த ஆசிரியர்!

பங்களாதேஷில் சம்பவம்

சத்தம் போட்டு பாடம் படிக்காததால் கோபமடைந்த பள்ளிக்கூட ஆசிரியர் ஒருவர் கத்தரிக்கோலால் 17 மாணவர்களின் காதுகளைத் துண்டித்தார்.

இந்தச் சம்பவம் பங்களாதேஷ் டோக்ரா மாவட்டத்தில் நடந்தது.

அங்குள்ள அராபிப் பள்ளிக்கூடத்தில் 5 முதல் 9 வயதுக்குட்பட்ட மாணவர்கள் படித்துவந்தனர். அவர்கள் சத்தம்போட்டு படிக்காமல் முணுமுணுத்ததால் கோபம் கொண்ட ஆசிரியர், கத்தரிக்கோலால் 17 மாணவர்களின் காதுகளைத் துண்டித்தார்.

மாணவர்கள் வலி தாங்காமல் குய்யோ முறையோ என்று கதறியழுத சத்தம் கேட்டு கிராமமக்கள் பள்ளிக்கூடத்தை நோக்கி ஓடினர். அங்கு ரத்தம் சொட்ட நின்ற மாணவர்களை உடனே உள்ளூர் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். 2 பேருக்கு தையல் போட்டு சிகிச்சையளிக்கப் பட்டது.

ஆசிரியரை கிராமவாசிகள் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே இழுத்து வந்து அடித்து உதைத்தனர். இதனால் காயமடைந்த ஆசிரியர் சாரி, அப்துல் மஜித் சாதாரும் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

பள்ளிக்கூடத்தில் மாணவர்களின் குறும்பு பொறுக்கமுடியாமல்தான் அப்படிச்செய்தேன். ஒருவேளை சாத்தான் எனக்குள் புகுந்து கொண்டு என்னை ஆட்டிவைத்திருக்கலாம் என்று ஆசிரியர் கூறினார்.

# ஈராக் மீது அமெரிக்கா நடத்தும் போர் சட்டவிரோதமானதாகும்!

ஐ.நா பொதுச்செயலர் கோபி அனான்

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்திருப்பது சட்டவிரோதமானது என்று ஐ.நா சபை பொதுச் செயலாளர் கோபி அனான் கூறியிருக்கிறார். அவர் பி.பி.சி தொலைகாட்சிக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது -

ஈராக் மீது அமெரிக்க கூட்டணி நாடுகள் நடத்திய போர் சட்டவிரோதமானது. ஐ.நா 'சபை தீர்மானத்துக்கு முரணானது.

ஈராக் மீது நடவடிக்கை எடுப்பதற்கான முடிவை ஐ.நா சபைதான் எடுத்திருக்கவேண்டுமே தவிர, அமெரிக்க கூட்டணி நாடுகள் அல்ல.

வருகிற ஜனவரி மாதம் ஈராக்கில் தேர்தல் நடத்தப்படவேண்டும். இப்போதுள்ள பாதுகாப்பு நிலைமையே அப்போதும் நீடிக்குமானால் தேர்தல் முடிவு நம்பும்படியாக இருக்காது.

தேர்தலை எப்படி நடத்துவது என்பது குறித்து ஐ.நா சபை ஈராக் இடைக்கால அரசுக்கு உதவியும், ஆலோசனையும் கூறும். ஆனால் தேர்தலை நடத்துவதா இல்லையா என்பதை அந்த நாட்டு இடைக்கால அரசுதான் தீர்மானிக்கவேண்டும்.

ஈராக் போர் தொடங்கியது முதல் வேதனையாக பல பாடங்களை நாம் கற்றுக்கொண்டோம். ஐ.நா அனுமதியும், சர்வதேச சமுதாய ஆதரவும் இல்லாமல் ஈராக் போன்ற சம்பவம் இனி நடக்கக் கூடாது. இவ்வாறு கோபி அனான் கூறினார்.

அடுத்த வாரம் ஐ.நா பொதுச் சபையின் வருடாந்தக் கூட்டம் தொடங்குகிறது. இதில் அனைத்து நாடுகளின் பிரதமர்களும், அதிபர்களும் கலந்துகொள்ளவிருக்கிறார்கள். அதற்கு முன்பாக பொதுச் செயலாளர் இப்படிப் பேசியிருக்கிறார்.



அமெரிக்காவின் புளோரிடா மற்றும் லூசியானா மாநில கடற்கரைப் பகுதிகளில் வீசும் கடும் சூறாவளி காரணமாக கடலிலுள்ள படகொன்று அடித்துச்செல்லப்பட்டு கரையொதுங்கியுள்ள காட்சி

# ஆப்கான் ஜனாதிபதி உரையாற்றவிருந்த பாடசாலை அருகே றொக்கட் தாக்குதல்!

(காபூல்)

ஆப்கான் ஜனாதிபதி ஹமீட் ஹர்சாய் உரையாற்றவிருந்த பாடசாலைக்கு அருகாக றொக்கட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் ஆப்கானின் தென்கிழக்கு மாகாணமாக கர்தேஷில் இடம்பெற்றது. இந்த மாகாணத்திலுள்ள விமானநிலையத்தில் ஹர்சாய், ஹெலிகொப்ரரில் வந்து தரையிறங்கிய வேளையிலேயே அவர் உரையாற்றவிருந்த பாடசாலைக்கு அருகில் இந்த றொக்கட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலையடுத்து - ஹர்சாய் தனது விஜயத்தை இடைநிறுத்தி, பாதுகாப்புக் காரணங்களுக்காக மீண்டும் தலைநகர் காபூலுக்குத் திரும்பினார்.

இந்தத் தாக்குதல் நடைபெற்றதை தம்மால் உறுதிப்படுத்த முடியுமென ஆப்கான் அதிகாரிகளை மேற்கோள் காட்டி ஏ.எப்.பி செய்தி நிறுவனம் தெரிவித்தது.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் ஆப்கானில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஹமீட் ஹர்சாய் பிரதான வேட்பாளர்களில் ஒருவர். எனவே பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு அவர் குறித்த பாடசாலைக்கு சென்றிருந்தார். அவ்வேளையிலேயே இந்த றொக்கட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்தத் தாக்குதலை நடத்தினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக ஆப்கான் அதிகாரிகள் தெரிவித்தனர்.



இந்தத் தாக்குதலை நடத்திவிட்டு மூவரும் மோட்டார் சைக்கிளில் தப்பிச்செல்ல முற்படுகையிலேயே கைதுசெய்யப்பட்டதாக ஆப்கான் உள்துறை அமைச்சர் லூத்புல்லா மாஷல் தெரிவித்தார். அத்துடன் சம்பவ இடத்திலிருந்து வெடிமருந்துகள் மற்றும் டிற்னேற்றர் என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட இவர்களிடமிருந்து ஆவணங்கள் மற்றும் வெடிக்கவைக்கும் கருவிகள் என்பனவும் மீட்கப்பட்டன. இவர்களைப் பொலிஸார் கைதுசெய்வதற்கு அந்தப் பகுதி கிராமவாசிகள் பெருமளவில் உதவிபுரிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.




ரஷ்யாவில் பாடசாலை சிறுவர்களை

# பணயக் கைதிகளாக பிடித்துவைத்திருந்தமைக்கு செச்சின்யப் போராளிகள் உரிமைகோரினர்!



ரஷ்யாவின் வடபகுதி நகரமான ஒசெஸ்ரியாவில் உள்ள பாடசாலை ஒன்றில் பாடசாலைச் சிறார்கள் உட்பட ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களை பணயக் கைதிகளாக சிறைபிடித்த சம்பவத்திற்கு செச்சின்ய போராளிகள் குழுவொன்று உரிமை கோரியுள்ளது.

ஒசெஸ்ரிய பாடசாலை மாணவர்களைப் பணயக் கைதிகளாக சிறைப்பிடித்த சம்பவத்தை தானே வழிநடத்தியதாக செச்சின்ய போராளிகளின் தலைவர் ஷாமில் பஷாஜெல் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த போராளிகளின் இணையத்தளம் ஒன்று ஒசெஸ்ரிய பாடசாலைச் சிறார்களை றயாடியுஸ் சலிக்கின் தலைமையிலான அணியொன்றே சிறைப்பிடித்ததாக தெரிவித்துள்ளது.

மேலும் இரண்டு விமானங்கள் தகர்ப்பிற்கும், மொஸ்கோவில் உள்ள புகையிரத நிலையம் ஒன்றையும் தாமே தாக்கியதாக அந்த இணையத்தளம் மூலம் செச்சின்ய போராளிகள் உரிமை கோரியுள்ளனர்.

செச்சின்ய தீவிரவாதிகளின் தலைவர் ஷாமில் பஷாஜெல் மற்றும் முக்கிய தலைவர்களுள் ஒருவரான அஸ்லாம் மாஸ்கடோவ் ஆகியோரைக் கைதுசெய்ய உதவுவோருக்கு 10 மில்லியன் டொலர்கள் சன்மானமாக வழங்கப்படும் என ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் அறிவித்துள்ள நிலையில் இந்தச் சம்பவத்திற்கு பஷாஜெல் உரிமை கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

செச்சின்யப் போராளிகளால் சிறைப்பிடிக்கப்பட்ட சிறார்களை மீட்பதற்காக ரஷ்ய இராணுவத்தினர் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் 500 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கரடிக்கு சிகிச்சையளிக்க விமானத்தில் வரும் மருந்து

பெல்ஜியம் நாட்டின் புருசெல்ஸ் நகரில் உள்ள வன உயிரியல் பூங்காவில் பனிக்கண்டத்து வெள்ளை போலார் கரடிகள் உள்ளன.

இதில் ஒரு கரடிக்கு புற்றுநோய் ஏற்பட்டு விட்டதாம். இதற்கு சிகிச்சையளிக்க ஒருவித யூக்கலிப்டஸ் மரத்தின் இலைகள் தேவைப்பட்டன.

பெல்ஜியத்தில் இந்த மரங்கள் இல்லை. இதற்காக இங்கிலாந்தில் இருந்து இந்த மரத்தின் இலைகள் தினமும் விமானம் மூலம் பெல்ஜியத்துக்கு கொண்டுவரப்பட்டு அந்த உயிரியல் பூங்காவுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

## பிரபலங்களின் வாழ்விலிருந்து...



ஒரு முறை லியோ டால்ஸ்டாய் ஒரு பூங்காவுக்குப் போயிருந்தார். தன் அருகில் இருந்தவர்களிடம் "ஹலோ - எப்படியிருக்கிறீர்கள்?" எனக் கேட்டார். அவர் ஒரு கோமக்காரர். நாம் இருவரும் இதற்கு முன் ஒரு முறைகூட சந்தித்துக் கொண்டதில்லை. பிறகு எப்படி எனக்கு 'ஹலோ சொல்லுகிறீர்கள்?' என்று கோமாகக் கேட்டுவிட்டு, அந்த இடத்தை விட்டுப் போய்விட்டார்.

அதற்கு அடுத்தநாள் டால்ஸ்டாய் அந்தப் பூங்காவுக்குப் போனபோது, முதல் நாள் கோமாகப் பேசியவர் எதிரில் வந்தார்.

"ஹலோ எப்படியிருக்கிறீர்கள்? நாம் இருவரும் ஏற்கனவே ஒரு முறை சந்தித்திருக்கிறோம். என்று சிரித்தபடி லியோ டால்ஸ்டாய் கூற அந்தக் கோபக்காரர் சிரித்து விட்டார்.

## விடுகதைகளும் விடைகளும்

1. வேகாத வெயிலில், வெள்ளையன் விளைகிறான்.
நீரில் பூக்காத பூ, நிலத்தில் மட்டும் பூக்கும் பூ.
வெள்ளைநிறப் பூ, நீரில் விளையும் பூ, காற்றில் கரையாது, தண்ணீரில் கரைந்து விடும் - அது என்ன?
2. அம்பலத்தில் ஆடும் அழகுக் கண்ணனுக்கு அங்கம் முழுவதும் தங்கக்கண்ணாடி அது என்ன?
3. ஒன்றுக்குப்பின் ஒன்றாய் வரும். மந்தையும் இல்லை, ஓயாத சத்தம் வரும் சந்தையும் இல்லை அது என்ன?

**விடைகள்**

1. உப்பு, 2. மயில், 3. கடல்

## எத்தனை முக்கோணங்கள் உள்ளன?



## கோள்களைப்பற்றி தெரிந்துகொள்ளுங்கள்

**புதன்**

இது சூரியனுக்கு மிக அண்மையிலுள்ள கோளாகும். உபகோள்கள் இல்லை. வளிக்கோளம் இல்லை. எப்போதும் சூரியனுக்கு ஒரு பக்கத்தையே காட்டும். இதன் சுற்றுச் சுற்றுகைக்காலம் சமனானது.

**வெள்ளி**

இது விடிவெள்ளி, மாலை வெள்ளி என இனங்காணப்படும். பிரகாசமான கோளம். உபகோள்கள் இல்லை. புவிக்கு மிக அண்மையிலுள்ள கோள் இதுவே.

**புவி**

உயிரினங்கள் வாழும் ஒரே ஒரு கோள் புவியாகும். உபகோள்கள் உண்டு. வளிக்கோளமும் உண்டு.

**செவ்வாய்**

செங்கோள் என இனங்காணப்படும். இதற்கு இரண்டு உபகோள்கள் உண்டு. காபநீர் ஒட்சைட்டுடைய வளிக்கோளம் உண்டு. உயிரினம் இருக்கும் எனவும், இருந்திருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது.

**வியாழன்**

கோள்களிலே மிகப்பெரிய கோள் வியாழன். இதற்கு சுமார் 17 உபகோள்கள் உண்டு. வெள்ளியைப் போன்று பிரகாசமானது. புவியைவிட ஈர்ப்பு சக்தி கூடியது.

**சனி**

இரண்டாவது பெரிய கோள் சனி ஆகும். ஒளி வளையங்களைக் கொண்டது. 24 உபகோள்கள் உண்டு. இது மற்றைய கோள்களைவிட மிகவும் மாறுபட்ட அமைப்புக் கொண்டது.

**யுரேனஸ்**

புவிக்கு மிகவும் தொலைவில் உள்ளது. இதனைக் காணமுடியாது. வெப்பம் மிகக்குறைவு (-210°C). 15 உபகோள்கள் உண்டு.

**நெப்டியூன்**

பச்சை நிறத்தில் ஒளிரும். 6 உபகோள்கள் உண்டு. இங்கு பனிக்கட்டி மலைகள் காணப்படுகின்றன.

**புளூட்டோ**

ஞாயிற்றுத் தொகுதியில் மிகவும் தொலைவினில் உள்ள கோள். இது மிகவும் சிறியது. சிறிய உபகோள்கள் உண்டு.

ச.சிசேகேனி, தரம் 8

## சித்திரக் கதை

### நட்பின் சிறப்பு

எவ்வளவுதான் பொன்னும், பொருளும் கிடைத்தாலும், அதனைப் பங்கிட்டுக்கொடுக்கும் தன்மை நண்பருக்கு மட்டும் தான் உண்டு. அது தான் நட்பின் சிறப்பு

பகுதி III

வாருங்கள் பாழடைந்த அரண்மனைக்கு



அங்கே ஒரு வாசகம் எழுதப்பட்டிருந்தது. பொன்மணி வாசித்துக் காட்டியது.

நீங்கள் அருகில் இருக்கும் பறக்கும் பாயில் ஏறி இருக்கவும். உங்களை ஆகாயக் கோட்டையில் கொண்டுசென்று விடும். அங்கே நிறையப் பொன்னும், பொருளும் உண்டு.



நால்வரும் பறக்கும் பாயில் புறப்பட்டனர்.





இதுதான் ஆகாயக்கோட்டை.



(தொடரும்...)

கதை ஓவியம் ந.பருண்

இங்கே மடிக்கவும்



# சிறுவர் அரங்கம்



**சிந்தனைக்கு!**

யாருமே முதல் படியில் வந்த காலை வைத்ததும் அந்த காலை எவரெஸ்ட் உச்சியில் வைக்கவில்லை. படிப்படியான முயற்சியே முக்கியமானது.

## புதிய காக்கைகளும் பழைய நரிகளும்

ஒரே ஒரு ஊரிலே ஒரு அம்மா காக்கை இருந்தது. அதற்கு இரண்டு குஞ்சுக் காக்கைகள்.

பத்து நாட்களாக இடைவிடாமல் மழை. மரங்களை எல்லாம் சுற்றிச் சுற்றி அடிக்கும் காற்று வேறு. அதனால் வெளியில் போய் இரைதேட வழமுடியாமல் அம்மா காக்கை தவித்துக் கொண்டிருந்தது.



குஞ்சுக் காக்கைகளுக்கோ நல்ல பசி.

"அம்மா! அம்மா! பசி தாங்கவலம்மா. மயக்கம் வற மாதிரி இருக்கம்மா" - குஞ்சுக் காக்கைகள் அழுதன. அம்மா காக்கைக்கும் அழுகை வந்துவிட்டது.

"சரி, சரி... அழாதீங்க. என் செல்லங்களா. நான் வெளியில போய் எப்படியாவது உங்களுக்குச் சாப்பிட ஏதாவது கொண்டு வாறன்" என்று கூறியபடியே - குஞ்சுக் காக்கைகளின் கண்ணீரைத் துடைத்து விட்டு, தனது கண்ணீரையும் துடைத்துக் கொண்டு அம்மா காக்கை வெளியில் பறந்து போனது.



எங்கெங்கோ அலைந்தது. இரை எதுவும் கிடைக்கவில்லை. சோர்ந்து போய் ஒரு பெரிய மரத்தின் கிளையில் வந்து அமர்ந்தது. மூச்சு வாங்கியது. ஈரச் சிறகுகளை உதறிக்கொள்ளவும்கூட சக்தியில்லாத அளவுக்குப் பசி வாட்டியது. சுற்றும் முற்றும் பார்த்தது.

கொஞ்சத் தூரத்தில், வெள்ளம் பெருகி வந்ததால், உடைந்துபோன ரயில்பாலம் தெரிந்தது. தண்டவாளங்கள் வளைந்து நெளிந்து கிடந்தன.

ரயில் பாலத்தைப் பழுது பார்ப்பதற்காக ஏராளமான ஆண்களும், பெண்களும் வேலை செய்துகொண்டிருந்தார்கள். அவர்களுக்கு மேலாக ஒரு ஹெலிகொப்டர் தாழப்பறந்து போனது. அதிலிருந்து இரண்டு பேர் தொலைநோக்கிகளைக் கண்களுக்கு நேரே வைத்துக் கொண்டு வெள்ளச் சேதங்களைப் பார்த்தனர்.



ரயில் பாலத்தைப் பழுதுபார்த்துக் கொண்டிருந்த மக்களில் பலர் "பிரதமர் வாழ்க!", "முதலமைச்சர் வாழ்க" என்று சத்தம் போட்டனர். ஹெலிகொப்டர் சத்தத்திலும், மக்கள் போட்ட சத்தத்திலும், மரங்களில் கட்டிய சேலைத் தொட்டில்களிலும் தூங்கிக் கொண்டிருந்த குழந்தைகள் விழித்துக் கொண்டு அழ ஆரம்பித்துவிட்டன.

அவர்களைப் பசியாற்றுவதற்காகச் சில அம்மாக்கள் மண்தட்டுகளைக் கீழே போட்டுவிட்டு வந்து, குழந்தைகளைத் தூக்கி முத்தம் கொடுத்துவிட்டுப் பால் கொடுக்க ஆரம்பித்தார்கள்.

அதனைப் பார்த்ததும் அம்மா காக்கைக்குச் சோகம் அதிகரித்தது. தனது குழந்தைகளின் பசியைப் போக்க இரை எதுவும் இன்னும் கிடைக்கவில்லையே என்று வருந்தியபடியே பறக்க நினைத்தது.

அந்த நேரம் பார்த்து... கமகமவென்று வடை வாசனை ஈர்க்காற்றில் மிதந்து வந்தது.

கீழே பார்த்தால், ஒரு வயதான பாட்டி சுடச்சுட வடைகளோடு வந்து, பக்கத்து மரத்தடியில் உட்கார்ந்தாள்.



அந்த வடை கையில் ஒரே ஒரு வடை கிடைத்தால் கூடப்போதுமே.தன் குழந்தைகளின் பசியைப் போக்கிவிடலாமே என்று அம்மா காக்கை ஆசைப்பட்டது. ஆனால், அந்த வடையை எப்படிப் பெறுவது என்று யோசித்துப் பார்த்தது.

"பாட்டி ரயில் பாலத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறாளே, மெதுவாகப் போய் அவர்களுக்குத் தெரியாமல் ஒரு வடையை எடுத்துக் கொண்டு ஓடிவிடலாமா? என்று நினைத்தது."

"சே சே... அப்படித் திருடுக்காக்கா... திருடுக் காக்கான்னுல்ல திட்டுவாங்க. அப்படியெல்லாம் செய்யக்கூடாது" என்று அந்த நினைப்பை வெறுத்துவிட்டது.

"சரி, பாட்டியிடமே போய்... "பாட்டி! பாட்டி! என்னோட குழந்தைங்க ரெண்டுபேரும் பசியால துடிக்குதுங்க. ஒரே ஒரு வடை கொடுக்கிறீங்களா" என்று கெஞ்சிக் கேட்கலாமா?" என்று நினைத்தது.



"அப்படிக் கெஞ்சிக் கேட்டா "பிச்சைக்கார காக்கா... பிச்சைக் காரக் காக்கா" என்று நல்லா கேலிசெய் வாங்க" என்று கூச்சப் பட்டது. அந்த நினைப்பையும் கைவிட்டுவிட்டது.

அப்படியானால் எப்படித்தான் அந்தப் பாட்டியிடமிருந்து வடையைப் பெறுவது என்று யோசித்துப் பார்த்தது அம்மா காக்கை. எப்படியானாலும் அதோ அந்தக் குழந்தைகளுக்குப் பால் கொடுத்துவிட்டுப் போய் மண் தட்டுகள் தூக்கும் தாய்மார்களைப் போல தானும் உழைத்துத்தான் பாட்டியிடம் வடை பெற வேண்டும் என்று முடிவுக்கு வந்தது.

தன்னால் எப்படி உழைக்க முடியும் என்று சிந்தித்தபடியே அம்மா காக்கை மரத்தைப் பார்த்தது. மரத்தின் கிளைகளில் எல்லாம் காய்ந்த குச்சிகள்.

அம்மா காக்கைக்கு ஒரே மகிழ்ச்சி. தாவித் தாவிப் போய் அந்தக் காய்ந்த குச்சிகளை எல்லாம் தனது அலகுகளால் முறித்து முறித்துக் கீழேபோட்டது. (தொடரும்...)

- அறிவுமதி

# வீடு கட்டும் விலங்குகள்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

தேனீக்கள் தங்கள் இனிய இல்லத்தை மரக்கிளைகளிலும், உயரமான கட்டடங்களிலும் அமைக்கின்றன. தேன்கூடு மென்மையாகவும், பளபளப்பாகவும் மெழுகுத் தன்மையுடனும் இருக்க, மகரந்தத் தூள்களை அதில் தூவுகின்றன.



மனிதர்களாகிய நாம் மட்டும் தான் குடியிருப்புகளை உருவாக்குகிறோம். என்று நினைக்கிறீர்களா?

எறும்புகளும் நிலத்துக்கு அடியில் குடியிருப்புக்களைக் கட்டுகின்றன. இந்த வீடுகளில், அடுக்கு அறை, குழந்தை எறும்புகளுக் கான 'நேசறி' வசதிகள் உண்டு. உறவினர் இறந்து போனால் புதைப்பதற்குக் கூட கல்லறை வசதி உண்டு.

இலைகளை, பட்டுப் போன்ற நூல்களைக் கொண்டு பின்னி அழகான கூடுகளை 'தையலகார' எறும்புகள் உருவாக்குகின்றன.




இந்த எறும்புகள், இலைகளைத் திரட்டி தன் பக்கங்களில் அடுக்கி வைத்துக் கொள்ளும். உழைக்கும் தொழிலாளி எறும்புகளையும் அவற்றின் முட்டைகளையும் நசுக்கிக் கூடு கட்டும். வானளாவும் கட்டடங்களைப் போல 10 மீற்றர் உயரம் கொண்ட 'புற்றுவட்டை' கறையான்கள் கட்டும்.

கறையான்கள் மரத்தைத் துண்டுகளாக்கி விழுங்கும். சமிபாடடையாத கழிவுப் பொருட்கள் உமிழ்நீருடன் குழைத்து சீமெநதைப் போலப் பூசி, புற்றை அமைக்கும். நுனுக்கமாகவும், மெல்லிய இழைகளாலும் அமைக்கப்படும் சிலந்தியின் வலை இன்னும் அதிசயமானது. சில சிலந்திகள் வைக்கோல், குழாய் போன்ற தாவரத்துண்டுகளைக் கொண்டு வீடு உருவாக்குகின்றன. திறந்து மூடும் வகையில் கதவுகளை இவை அமைக்கின்றன. பூச்சி, புழுக்கள் கதவருகே வரும்பொழுது 'படார்' என இக்கதவைத் திறந்து மூடுகின்றன. உடனே 'லபக்' கென அவற்றைப் பிடித்து இரையாக்கிக் கொள்கின்றன.

# தெரிந்துகொள்ளுங்கள்

கடல்நீர் - உப்பு கரிக்கிறது. ஆனால், கடலிலுள்ள மீன்களுக்கு உப்பு கரிப்பதில்லை. இதைப்பற்றி யோசித்திருக்கிறீர்களா? எந்தச் சுற்றச்சூழலில் வாழ்ந்தாலும், ஒரு உயிரினம் தன்னுடைய உடல் சுற்றுப்புறத்தை ஒரே சீராக வைத்துக் கொள்ளும் தகவமைப்பைப் பெற்றிருக்கும். கடல் மீனை உண்ணும் போது, அதன் வெளிப்பகுதிகூட உப்புக் கரிப்பதில்லை.

மீன்களின் வெளிப்பகுதியில் அமைந்துள்ள சவ்வுகள் தான் மீன்களை கடல் உப்பிலிருந்து காப்பாற்றுகின்றன.

இவற்றில் இருக்கும் ஒருவகை சிறப்பு செல்கள் - மீன் உட்கொள்ளும் நீரிலுள்ள உப்பை அடர்கரைசலாக மாற்றி, கழிவோடு சேர்த்து வெளியேற்றுகின்றன. இதனால் தான் கடல் நீரிலேயே இருந்தாலும்கூட மீன் உப்பு கரிப்பதில்லை.

## மூளைக்கு வேலை சென்றவார விடை

முதலாமவருக்கு

| | | | |
|---|---|---|---|
| 3 பெட்டிகள் | x 3 | பொம்மைகள் | = 9 |
| 4 பெட்டிகள் | x 2 | பொம்மைகள் | = 8 |
| 3 பெட்டிகள் | x 1 | பொம்மை | = 3 |
| 10 பெட்டிகள் | | பொம்மைகள் | 20 |

இரண்டாமவருக்கு

| | | | |
|---|---|---|---|
| 3 பெட்டிகள் | x 3 | பொம்மைகள் | = 9 |
| 4 பெட்டிகள் | x 2 | பொம்மைகள் | = 8 |
| 3 பெட்டிகள் | x 1 | பொம்மை | = 3 |
| 10 பெட்டிகள் | | பொம்மைகள் | 20 |

மூன்றாமவருக்கு

| | | | |
|---|---|---|---|
| 4 பெட்டிகள் | x 3 | பொம்மைகள் | = 12 |
| 2 பெட்டிகள் | x 2 | பொம்மைகள் | = 4 |
| 4 பெட்டிகள் | x 1 | பொம்மை | = 4 |
| 10 பெட்டிகள் | | பொம்மைகள் | 20 |

## மூளைக்கு வேலை

1. ஒரு மரத்தில் பத்துப் பறவைகள் அமர்ந்திருந்தன. ஒரு வேடன் தன் துப்பாக்கியில் இருந்த ஒரே குண்டின் மூலம் இரு பறவைகளைச் சுட்டு வீழ்த்திவிட்டான். அப்படியானால் மரத்தில் எத்தனை பறவைகள் மீதி இருக்கும்?

2. பத்தில் ஆறு போனால் என்ன ஆகும்.

# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?
அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.
5இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.
கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :.................................
கற்கும் பாடசாலை :.................................
கற்கும் தரம் :.................................
வீட்டு முகவரி :.................................
பிறந்த திகதி :.................................
ஆர்வமுள்ள துறைகள் :.................................

...................... ......................
திகதி ஒப்பம்

அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

இங்கே மடிக்கவும்



# அன்புள்ள சிறுவர்களே!

கடந்த 8 ஆம் திகதி சர்வதேச 'எழுத்தறிவு தினம்' கொண்டாடப்பட்டது.

எழுத்தறிவுள்ளவர்கள், எழுத்தறிவற்றவர்கள் என்ற இந்த இரண்டு பதத்தினுடைய வேறுபாடுகள் உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஒரு மொழியை எழுதுவதற்கும், வாசிப்பதற்கும் தெரிந்த ஒருவரை எழுத்தறிவுள்ளவர்கள் என அழைக்கிறோம்.

அதேபோல் எழுத, வாசிக்கத் தெரியாத பல பேர் உலகில் இருக்கிறார்கள். பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தைகளுக்கும் கல்வி கற்பதற்கான உரிமை இருக்கிறது. ஆனால், பல குழந்தைகளுக்கு பாடசாலைக்குச் செல்வதற்கான வாய்ப்புக்கள் பல்வேறு காரணங்களால் கிடைப்பதில்லை.

சில நாடுகளில் பாடசாலைக்குச் செல்லும் வயதில் உள்ள உங்களைப் போன்ற சிறுவர்கள் வறுமை காரணமாக, தொழிலுக்குச் செல்கின்றார்கள். உங்களுக்கு கல்வி கற்பதற்கான வாய்ப்பு கிடைத்திருக்கிறது. எனவே அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வதுடன், உங்களுக்குத் தெரிந்த - எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்கு உதவி புரியுங்கள்.

- பாசமுடன் - சாரு அக்கா

# கொக்கும் மீனும்

பெண்ணம் பெரிய குளத்தினிலே
மிகையாய் மீன்கள் இருந்தனவே
வெள்ளைக் கொக்கு அங்கு வந்ததுவே
சின்னஞ் சிறிய மீன்களெல்லாம்
துள்ளித் துள்ளிக் குதித்ததுவே
இவற்றின் ஜால வித்தைகளை
பார்த்து நின்ற கொக்கதுவும்
அவற்றை தனது இரையாக்கியது
குளத்தில் நீண்ட காலமாக
வசித்து வந்த கரும்பாம்பொன்று
கொக்கிடம் வகையாய் சொன்னதுவே
எனது உணவை நீ பிடித்தால்
நானெங்கே செல்வேன் என்றதுவே
இவர்கள் இவ்வாறாக வாக்குவாதப்படவே
அங்கே வந்தான் செம்படவன்
குளத்திலிருந்த மீன்கள் அனைத்தையுமே
வேட்டையாடி சென்றுவிட்டான்
கொக்கும் பாம்பும் சண்டை செய்து
சுற்றில் அடைந்தது ஏமாற்றம்
இவற்றின் மூலம் நாம் கற்றுணரும்
பாடம் ஒன்று யாது எனின்
ஒற்றுமையாக நாம் வாழ்ந்தால்
எவரும் எம்மை பிரிக்க முடியாது.

ச.சக்திதர்சினி
தரம் - 5
தமிழ் கந்தையா வித்தியாசாலை,
கந்தரோடை.

# உங்கள் கைவண்ணம்



ரி.பிரதாப்
தரம் - 11
பொலிகண்டி இ.த.கலவன் பாடசாலை



சி.கரிகரன்
தரம் - 7
கொக்குவில் இந்துக் கல்லூரி

## எனக்கு விருப்பமான கிரிக்கெட் வீரன்

எனக்கு விருப்பமான கிரிக்கெட் வீரன் முரளிதரன்.
இவருக்கு 32 வயதாகின்றது.
இவர் சிறந்த பந்து வீச்சாளர்.
முரளிதரன் எமது நாட்டுக்கு எடுத்துக்காட்டான வீரன்.
இவர் 529 விக்கெட்டுக்களை கைப்பற்றியுள்ளார்.

தி.ஜெனதுமாரன்
ஆண்டு 6
கோப்பாய் கிறிஸ்தவ,
கல்லூரி

## என்னைப் பற்றி

எனது பெயர் நாகவதனி. எனது அப்பாவின் பெயர் மாணிக்கராசா. எனது அம்மாவின் பெயர் சிவமலர். எனது சகோதரர்கள் ஜீவிதா, உமாராஜ், விஜிதன் ஆகியோர். நான் யாவேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் தரம் 6 இல் கல்வி கற்கிறேன். நான் வசிக்கும் இடம் புகையிரத நிலைய வீதி, சுன்னாகம். எனக்கு விருப்பமான பாடம் தமிழ். விருப்பமான விளையாட்டு அஞ்சல் ஓட்டம். விருப்பமான பூ றோஜாப்பூ. எனது பொழுதுபோக்கு முத்திரை சேகரித்தல். எனது நண்பிகள் தக்சாயினி, மயூரி, விஸ்னுகா. எனது எதிர்கால இலட்சியம் மருத்துவர் ஆகவேண்டும் என்பதே.

மா.நாகவதனி
தரம் - 6
வேம்படி மகளிர்
உயர்தரப் பாடசாலை

# நகைச்சுவை

குமார் - மீன் சாப்பாடு ஒரு பார்சல் வாங்கவேணும்.
ராமு - இந்தாங்கோ மீன் சாப்பாடு
குமார் - இதென்ன சோற்றுப் பார்சல். நான் வாங்கி வரச் சொன்னது மீனுக்குப் போடுற சாப்பாடு.

வீட்டுக்காரர் - ஒவ்வொரு மாதமும் வீடு வாடகைக்கு அலைந்து திரிந்து கால் புண்ணாகிவிட்டது.

வாடகைக்கு இருப்பவர் - ஏன் ஒவ்வொரு மாதமும் அலையிறியள். வருடத்துக்கு ஒருக்கா வந்து வாடகைக் காசை வாங்குங்கோவன்.

சா.பெ.சுபாந்தினி
தரம் - 7
இளவாலை கன்னியர்மடம்
மகாவித்தியாலயம்.

# My Hobby

My hobby is rearing fish.
I have a large fish tank at home.
I have many kinds of fish in this tank.
There are Black, White, Red and Blue colours.
I have a gold fish too.
It is very pretty.
My fish eat mash and rice.
My father helps me to change the water in the fish tank.
I spend my liesure time watching the fish.
I love my fishes very much.

S.Girish
Year - 8
Union College

# தியாகி திலீபனின் நம்பிக்கையின் வெளிப்பாடே இன்றைய விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சி!

## நினைவு தின நிகழ்வில் இளம்பரிதி



**"தேர்தலின் மூலம் மக்களால் ஆணை வழங்கப்பட்ட - இடைக்கால நிர்வாக வரைபை விட்டு, நாங்கள் வேறு எந்தத் தீர்வு பற்றியும் பேச முடியாது. வேறு எதனையும் கருத்தில் எடுக்கவும் முடியாது" - இவ்வாறு யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரதி தெரிவித்தார்.**

நல்லூர் பின்வீதியில் அமைந்துள்ள தியாகி திலீபனின் நினைவுத் தூபியருகே நடைபெற்ற தியாகி திலீபனின் நினைவு நாளின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் -

தியாகி திலீபன் மக்களோடு ஒருவராக வாழ்ந்து, இருந்த வளங்களைக் கொண்டு போராட்டத்தை வளர்த்து வலிமையான ஒரு கட்டத்தை இந்தப் போராட்டம் அடைந்தபோது, விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றுச் சந்தர்ப்பங்களிலே ஏற்படக்கூடிய வல்லாதிக்க நெருக்கடிகளை தவிடு பொடியாக்கும் நோக்கோடு, மக்களின் விழிப்புக்காகவும், தெளிவுக்காகவும் இந்த வீதியிலே நீராகாரம் கூட அருந்தாது உண்ணா நோன்பிலிருந்து தியாகியானார்.

திலீபன் மக்களை நம்பினான், மக்கள் திலீபனை நம்பினார்கள். எம் தேசியத் தலைவரை நம்பினார்கள். இவ்வுறுதியின் வெளிப்பாடாக இன்று இந்தவிடுதலைப் போராட்டம் வளர்ச்சியடைந்து, சர்வதேச அளவில் ஒரு அந்தஸ்த்தையும், சர்வதேச அளவில் ஒரு முக்கியத்துவத்தையும் பெற்று நிற்கின்றது.

ஒரு சந்தர்ப்பத்தில் இந்த நாட்டை முழுமையான சிங்கள பௌத்த நாடாக்க, சிங்களப் படைகள் முயன்ற போது, மக்கள் தீர்மானம் எடுத்து அதனைத் தடுத்து அதன் மூலமே விடுதலைப் போரிலே பாரிய மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். அதனால், இன்று ஓர் சமாதான சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால், இரண்டரை வருடங்களாகியும் இந்தச் சமாதானக் காலத்தில் எந்தவொரு நன்மையும் மக்களுக்குக் கிடைக்கவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்திலே தான் நாங்கள் சர்வதேச சமூகத்திடமும், இலங்கையில் இருக்கும் புத்திஜீவிகள், அரசியல் தலைவர்களிடமும் எமது மண்ணினதும், மக்களினதும் கௌரவம் மதிக்கப்படும் போதுதான், இந்தத் தீவினில் எந்தவொரு முன்னேற்றமும் முழுமையாக ஏற்படும் என்றும், இதனைப் புரிந்துகொண்டு அவர்களுக்குரிய அந்தஸ்த்து, கௌரவத்தையும், உரிமைகளையும் புரிந்து கொண்டு, சுபீட்சமான வாழ்க்கையை வழங்குவதில் காலத்தை தாழ்த்தாது அதனை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும் என எமது இயக்கமும், எமது தலைமையும் வலியுறுத்தி வருகின்றது.

அந்தவகையிலே இலங்கைத் தீவிலே தமிழர்களுக்குரிய தீர்வுகளைக் காண்பதற்கு வழிவகையாக இலங்கை அரசு அதிகாரப்பரவலாக்கல் என்ற கருத்தினையே முன்வைக்கின்றது. இலங்கையின் அரசியல் யாப்பில் மாற்றம் செய்யாமல் இந்த அதிகார பரம்பல் என்ற எண்ணக்கருவை நடைமுறைப்படுத்துவது இயலாத காரியம் என்பது அனைவரும் அறிந்ததே. இந்த அதிகாரப்பரவலாக்கலுக்குரிய எந்த வொரு சாத்தியக் கூறுகளையும் ஏற்படுத்தாமல், வேண்டுமென்று காலத்தை இழுத்தடிப்பதிலேயே அரசு குறியாகவுள்ளது. தமிழினத்தை மீண்டும் மீண்டும் நலிவடைய வைக்கும் சூழ்ச்சியாகவே இது உள்ளது. இதனை நாங்கள் தெளிவாகவே புரிந்திருக்கின்றோம். எமது மக்களும் துல்லியமாகவே இதனை அறிந்து வைத்துள்ளனர்.

எம் மக்களின் அணிதிரள்வையும், பங்களிப்புகளையும், நம்பிக்கையையும் நாம் மிகவும் மதிக்கின்றோம். அதனாலேயே அவர்களது சுபீட்சமுள்ள வாழ்வைக் கருத்திற் கொண்டு, ஒரு இடைக்கால தன்னாட்சி அதிகார வரைபை அவர்கள் முன் சமர்ப்பித்தோம். இதற்கு மக்களும் தேர்தல் மூலம் ஏகோபித்த ஆணையையும் கொடுத்துள்ளார்கள்.

எனவே, மக்களின் ஆணையைப் பெற்ற இந்த இடைக்கால வரைபைவிட, வேறு எந்த தீர்வு பற்றியும் பேசமுடியாது, கருத்தில் எடுக்கவும் முடியாது. எனவே, இதனை ஏற்று அதற்கு மதிப்பளித்து தாங்களாகவே அதிலுள்ள விடங்களை உள்வாங்கி தமிழருடைய இன்றைய பிரச்சினைக்கு தீர்வு காணப் படவேண்டும். மாறாக காலத்தை இழுத்தடிக்கும் நடவடிக்கை தொடருமானால், எந்தவொரு தீர்வுக்கும் வர முடியாத நிலை தேன்றிவிடும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## சின்னஞ் சிறு செய்திகள்

### நெல்லியடியில் விளம்பர சேவை

நெல்லியடி நகரப் பகுதியில் தனியார் விளம்பர ஒலிபரப்புச் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனால், இந்தப் பகுதி வர்த்தகர்கள் பெரும் நன்மை அடைவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இப்படியான சேவை எதுவும் இதுவரை இந்தப் பகுதியில் ஆரம்பிக்கப்படவில்லை. இதற்கு நெல்லியடி பிரதேச சபை அனுமதி வழங்கியுள்ளது. (14)

### பாடநூல்களைப் பெற்றுக்கொள்ளவும்

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் தரம் 7 வகுப்பிற்குரிய கணிதம், விஞ்ஞானம், தமிழ் ஆகிய புத்தகங்கள் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்துக்கு வந்துள்ளன. எனவே, தரம் 7 வகுப்பு உள்ள பாடசாலை அதிபர்கள் உடனடியாக இந்தப் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கோட்டக்கல்வி அலுவலர் நா. சத்தியநாதன் அறிவித்துள்ளார். (29)

### போக்குவரத்து விதிமுறை கருத்தரங்கு

வீதி விபத்துக்களை தடுப்பது சம்பந்தமான கருத்தரங்கும், செய்முறை கண்காட்சியும் அண்மையில் சாவகச்சேரி நகர் பகுதியில் இடம் பெற்றது. இந்த நிகழ்வை யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் போக்குவரத்துப் பிரிவினர் ஏற்பாடு செய்து, சாவகச்சேரி பொலிஸ் பிரிவினருடன் இணைந்து நடத்தினர். (29)

### மரம் வளர்ப்புத் திட்டம்

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், சூழல் பாதுகாப்பு பகுதி, மாசார் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையினர் இணைந்து, மரவளர்ப்பு திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

இந்தத் திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கையாக தாளையடி - புதுக்காடு வீதியில் மாசார் பிள்ளையார் ஆலயத்துக்கு அண்மையில் உள்ள காணியைத்துப்புரவு செய்யும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. (21)

### சகல அஞ்சல் அலுவலகங்களுக்கும்

உலக அஞ்சல் தினக்கொண்டாட்டத்தின் நிமித்தம் சகல அஞ்சல், உல அஞ்சல் அலுவலகங்களில் செய்யவேண்டிய திட்டங்கள், செய்து முடிக்கப்பட்ட வேலைத் திட்டங்களை உரியபடிவத்தில் பூர்த்தி செய்து அஞ்சலதிபர்கள், உப அஞ்சலதிபர்கள், பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் ஊடாக ஒக்ரோபர் 16ஆம் திகதிக்கு அனுப்பி வைக்குமாறு அஞ்சலமா அதிபர் கே.ஏ.எஸ். சேனதீரகோரிக்கை விடுத்துள்ளார். (21)

## மக்களின் விஷமச் செயற்பாடுகளால் மிதிவெடி அகற்றும்பணி ஸ்தம்பிதம்!

(யாழ்ப்பாணம்)

மிதிவெடிகள் அகற்றப்பட்டு வருகின்ற பகுதிகளில் மிதிவெடி அகற்றும் பணியாளர்களினால் நடப்படுகின்ற மிதிவெடி அபாய குறியீட்டுக்கட்டைகள் நாட்டப்பட்ட பகுதி உட்பட மிதிவெடி அகற்றும் இடங்களை மக்கள் அசுத்தம் செய்வதனால், யாழ். குடாநாட்டில் மிதி வெடிகளை அகற்றும் பணிகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாக யாழ். செயலகத்தில் இயங்கும் மிதிவெடி அகற்றும் செயற்பாட்டு அலுவலர் தெரிவித்தார்.

நேற்று யாழ். செயலகத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்- மிதிவெடி உள்ள பிரதேசங்களில் மக்கள் நடமாடுவது ஆபத்தானது. அதேபோல் மிதிவெடிகள் அகற்றப்படுகின்ற பிரதேசங்களில், மிதிவெடி அகற்றும் பணியாளர்கள் தவிர வேறு எவரும் எந்த நேரத்திலும் செல்வதற்கு அனுமதி இல்லை.

இதைவிட மிதிவெடி அகற்றுவதற்காகப் பயன்படுத்துகின்ற குறியீட்டுக் கட்டைகளையும், கயிறுகளையும் விஷமிகள் எடுத்துச் செல்கின்றனர். இதனால் மிதிவெடி அகற்றும் பணிகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

இவ்வாறான செயற்பாடுகளால் ஆவரங்கால், நீர்வேலி போன்ற பகுதிகளில் மிதிவெடி அகற்றும் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. எனவே, மிதிவெடிகளை நாம் இயன்றவரை வேகமாக அகற்றுவதற்கு சமூக அமைப்புக்கள் ஒத்துழைக்கவேண்டும்.

மிதிவெடி அகற்றப்படுகின்ற பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு பொது



அமைப்புகளும், மிதிவெடி அகற்றும் பணியாளர்களால் நாட்டப்படுகின்ற குறியீட்டுக் கட்டைகளை பாதுகாப்பதற்கும், அந்த பகுதிகளில் மக்கள் மற்றும் கால்நடைகள் நடமாடுவதை தவிர்ப்பதற்கு முன்வரவேண்டும். தற்போது 5 பிரதேச செயலர் பிரிவில் உள்ள, 80 இடங்களில் மிதிவெடிகளை அகற்றிவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நல்லூரில் திருட்டில் ஈடுபட்ட சிறுவனை சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்க உத்தரவு

நல்லூர் திருவிழாக்காலத்தில் திருட்டிலீடுபட்ட சிறுவனை நன்நடத்தைக்காக கானான் சிறுவரில்லத்தில் தங்கி கல்விகற்குமாறு யாழ். மாவட்ட நீதிபதி ஆர்.ரி. விக்னராஜா உத்தரவிட்டார்.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழாக் காலத்தில் பல்வேறு திருட்டுக்களில் ஈடுபட்ட சுன்னாகத்தைச் சேர்ந்த 11 வயதுச் சிறுவன் தேர்த்திருவிழா அன்று கச்சான் வியாப ாரி ஒருவரின் 25 ஆயிரம் ரூபாவைக் களவாடியபோது, கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அந்தச் சிறுவன் நேற்றுமுன்தினம் யாழ். மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டபோது, வழக்கை விசாரித்த நீதிபதி, குற்றவாளி சிறுவனாக இருப்பதால், அவனுடைய எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு இங்கு சிறுவர் நன்நடத்தை நிலையம் இன்மையால், நீதி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட சிறுவர் பராமரிப்பு நிலையமான இருபாலை கானான் சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்கு சிறுவனைக் கல்விகற்க அனுப்பி வைக்க உத்தரவிட்டார். (ப)

## யாழ்.பிரதேச செயலக நடமாடும் சேவை!

(யாழ்ப்பாணம்)

ஜே/72 சின்னக்கடை, ஜே/73 யாழ்.நகர் மேற்கு, ஜே/74 யாழ். நகர் கிழக்கு, ஆகிய கிராம சேவையாளர் பிரிவு மக்களுக்கு பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொடுத்தல் போன்ற சேவைகளுக்கான நடமாடும் சேவையொன்று, எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். அடைக்கல மாதா ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

சம்மந்தப்பட்டவர்கள் தங்கள் வசமுள்ள ஆவணங்களுடன் சமூகமளித்து இந்தச் செயன்முறையின் உச்சப்பயன்பாட்டை பெற்றுக்கொள்ளுமாறு யாழ்ப்பாணம் பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

ஆவணங்கள் இல்லாதவாகளுக்கு அவற்றை பெற்றுக்கொடுக்க மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பங்கீட்டு அட்டை, குடும்ப அட்டைகளை கொண்டுவந்தால் கருமங்களை இலகு வாக்கலாம் என யாழ். பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தெரிவித்தார்.

## திருட்டுகளில் ஈடுபட்டோர் கைது செய்யப்படவில்லை

கொடிகாமம் நகரப் பகுதியில் கடந்த சில மாதங்களாக நடைபெற்ற திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க பொலிஸார் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என கொடிகாமம் வர்த்தகர்கள் பெரும் விசனம் தெரிவித்தனர்.

பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள புடவைக் கடையிலும், மருந்துக் கடையிலும், அதேபோல ஏ9 பிரதான வீதியிலும் அமைந்துள்ள பல சரக்கு கடை ஒன்றிலும் நடைபெற்ற திருட்டுச் சம்பவத்திலும் ஈடுபட்ட குற்றவாளிகளை இதுவரை கைது செய்யப்படாததையிட்டு வர்த்தகர்கள் விசனம் தெரிவித்தனர்.

இந்தத் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளிகளை இனங்கண்டு, கைது செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டுமென வர்த்தகர்கள் சம்மந்தப்பட்டவர்களை கேட்டுள்ளனர்.

## நாவற்குழி - கைதடி பாலம் புனரமைப்பு பணி ஆரம்பம்!

யாழ்ப்பாணம் - கண்டி வீதியில் அமைந்துள்ள நாவற்குழி - கைதடி பாலங்கள் திருத்தி அமைப்பதற்கான முதற்கட்ட வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

2000ஆம் ஆண்டு இந்தப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது, இரு பாலங்களும் முற்றாகச் சேதமடைந்தன.

போக்குவரத்து தடைப்படாமல் இருப்பதற்காக இரு இடங்களிலும் இரும்புப் பாலங்கள் அமைக்கப்பட்டு, வெகு சிரமங்களுக்கு மத்தியிலேயே போக்கு வரத்துக்கள் நடைபெற்று வந்தன.

இரு பாலங்களையும் திருத்தும் நடவடிக்கையின் முதற்கட்டமாக இந்தப் பாலங்களுக்கு, அண்மையில் சமாந்தரமாக இன்னொரு வீதி அமைக்கப்பட்டு வருகிறது.

கைதடிப் பாலத்துக்கு அண்மையிலுள்ள வீதி அமைக்கும் பணி முடிவடைந்துள்ளதுடன், நாவற்குழி பாலத்துக்கு அண்மையிலுள்ள வீதியை புனரமைப்புப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. (21)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்
முதலாவது அகவையில்
பெயர் : ப. வைஷ்ணவி
முகவரி : கலைமகள் வீதி, கட்டப்பிராய்.

வாழ்க வளமுடன்
சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்






### அடிக்கல் நாட்டுவிழா

(மன்னார்)

மன்னார் பரப்புக்கடந்தான் பிரதேசத்தில் முன்பள்ளிக்கான அடிக்கல் நாட்டுவிழா கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வு 'சோஆ' திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் புதிய நிரந்தரக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

### பூநகரி பிரதேசத்தில் குளங்கள் புனரமைப்பு

(பூநகரி)

பூநகரிப் பிரதேசத்திலுள்ள குளங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

பூநகரி பிரதேசத்திலுள்ள கமநல அபிவிருத்தி நிலையத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 3 லட்சத்து 80 ஆயிரம் ரூபா செலவில் பெரிய தம்பிராய்க் குளத்தின் அணைக்கட்டு புனரமைக்கப்பட்டு வருகின்றது.

மேலும் கெயர் நிறுவன நிதி ஒதுக்கீட்டின் கீழ் பூநகரி கிராய்க்குளம் 6 லட்சத்து 33 ஆயிரம் ரூபா செலவிலும், கௌதாரிமுனை நீர் தடுப்பணை, 2 லட்சத்து 24 ஆயிரம் ரூபா செலவிலும், கறுக்காய் பாலம்குளம் 3 லட்சத்து 88 ஆயிரம் ரூபா செலவிலும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

### இரண்டு நிறுவனங்களால் முன்னோடி வேலைத்திட்டங்கள்

பொதியமலை கிராமத்தில் நிகொட் நிறுவனமும், ஆய்வு அபிவிருத்தி நடவடிக்கை நிறுவனமும் இணைந்து, முன்னோடி வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன.

இந்தக் கிராமத்தின் முன்னோடி வேலைத் திட்டங்களாக சிறுவர் பாடசாலைகளான முன் பள்ளிகள் அமைக்கப்பட்டு முடிவடையும் நிலையிலுள்ளன. இந்த வேலைத்திட்டம் பூர்த்தியானதும் இந்தக் கிராமத்திலுள்ள 40 இற்கு மேற்பட்ட சிறார்கள் கல்வி கற்க வாய்ப்பு ஏற்படும் என தெரியவருகின்றது.

மேலும் பல வேலைத்திட்டங்கள் இந்த நிறுவனங்களால் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

### 5 வீடுகள் கையளிப்பு

(விஸ்வமடு)

விஸ்வமடு பிரதேசத்தில் தியாகி திலீபன் நினைவுநாளை முன்னிட்டு நேற்றுமுன்தினம் மாலை 3.30 மணிக்கு மாவீரர், போராளிகள் குடும்ப நலம் காப்பகத்தால், போராளிகள், மாவீரர்களின் பெற்றோருக்கு வீடுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இரண்டு மாவீரர்களைக் கொண்ட மூன்று குடும்பங்களுக்கும், இரண்டு போராளிகள் உள்ள குடும்பங்களுக்கும் ஐந்து வீடுகள் வழங்கப்பட்டன.

# முறையான காணி அனுமதிப்பத்திரங்களின்றி நெருக்கடிகளை சந்திக்கும் கிளிநொச்சி மக்கள்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் அனேகமான பகுதிகள் குடியேற்றக் கிராமங்களாகும். இந்தக் குடியேற்றக் கிராமங்களில் யாழ்ப்பாணத்திலிருந்தும், மலையகம் உட்பட்ட தென் பகுதியில் இருந்தும், இடம்பெயர்ந்து வந்தவர்கள் குடியேறி வாழ்ந்து வருகின்றனர்.

இந்தக் குடியேற்றத்திட்டங்களில் புதிய காணிகளில் மக்கள் குடியேற்றப்பட்டனர். இவ்வாறு குடியேற்றப்பட்ட மக்களுக்கு காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு பின் அவர்கள் வாழும் காணிகளுக்கு உறுதி வழங்கப்படுவது நடைமுறையாகும்.

ஆரம்ப குடியேற்றங்களுக்கு இந்த உறுதிகள் வழங்கப்பட்டுவிட்டன. அதாவது முல்லைத்தீவு மாவட்டத்தில் அனேகமாக குடியேற்றப்பட்ட மக்களுக்கு சட்டபூர்வமாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுவிட்டன.

ஆனால் அதிகமாக குடியேறிய மக்கள் கிளிநொச்சியில் தான் வாழ்ந்து வருகின்றனர். கிளிநொச்சி நகரை அண்டிய பகுதிகளில் தென்னிலங்கையில் இருந்து வன்முறைகளால் இடம்பெயர்ந்து வந்த மலையக மக்கள் குடியேற்றப்பட்டனர். இவ்வாறு குடியேற்றப்பட்ட மக்களுக்கு காணி அனுமதிப்பத்திரம் என்ற அளவிலேயே அனுமதி வழங்கப்பட்டது.

அரச அதிகாரிகள் சிலர் தமது செல்வாக்கு ஒரே காணிக்கு பலருக்கு அனுமதிக் கடிதங்களைக் கொடுத்துள்ளனர். இதனால் இன்று பெரும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. ஒருவர் தன்னிடம் உள்ள அனுமதிக் கடிதத்தை வைத்து காணிகளை விற்கும்போது காணியை வாங்கியவர் அதில் தனது ஆதிக்கத்தை நிலைப்படுத்து கின்றபோது மற்றொருவர் இது தனது காணி என சான்று காட்டி அதனை பறிமுதல் செய்கின்ற நிலை காணப்படுகின்றது.



இந்த பகுதிகளில் 1970 ஆம் ஆண்டு கடைசி முதல் 1980 ஆம் ஆண்டு நடுப்பகுதி வரையான காலப் பகுதியில் குடியேறிய மக்களுக்கு இன்றுவரை வலுவான உரிமையுடன் ஒரு துண்டு நிலம்கூட வழங்கப்படவில்லை. உறுதியான அனுமதிப் பத்திரங்கள் கூட வழங்கப்படாத நிலையில் தான் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இராணுவ ஆக்கிரமிப்பால் இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்கின்ற போது தான் இந்தப் பிரச்சினை விஸ்வரூபம் எடுத்தது.

மீளக்குடியமர்வுக் கொடுப்பனவை மக்கள் பெறுவதற்கு காணி அனுமதி பத்திரம் காட்ட வேண்டுமெனக் கட்டாயப்படுத்தப்படுகின்றது.

இதனால் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவை பெறுதல் என்பது நடைமுறைகளுக்கு சாத்தியப்படாமல் உள்ளது. இதைவிட ஒரே காணிக்கு பலர் அனுமதிகள் வைத்திருக்கின்ற நிலைமையும் இங்கு காணப்படுகின்றது.

இந்தக் காணிகளுக்கு ஒழுங்கான சான்றுகள் வழங்கப்படாத காரணத்தால் ஏமாற்றுதல்கள், ஏமாறுதல்கள் தொடர்கின்றன.

இதனால் காணிப் பிணக்குகள் தொடர்பான வழக்குகள் அதிகளவில் போர் நிறுத்தக் காலத்தில் தம்மிடம் வந்துள்ளதாக தமிழீழ நீதிநிர்வாகத்துறைப் பொறுபபாளர் பரா தெரிவித்தார்.

கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்கு மேலாக ஒழுங்கான காணி அனுமதி இல்லாமல் இந்தப் பகுதி மக்கள் மிகுந்த நெருக்கடிகளை பல வழிகளிலும் அனுபவிக்கின்றனர். ஆனால் இதுவரை இதற்குத் தீர்வு வழங்கும் முன் முயற்சிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டதாகவும் தகவல் இல்லை.

இந்தப் பகுதி மக்கள் அடிப்படை மீள் குடியமர்வு கொடுப்பனவைப் பெறுதல் முதல், தமது வாழ்வை நிலைப்படுத்துவரை எதுவுமே ஒழுங்காக செய்யப்பட முடியாத நிலைமையிலுள்ளனர். அதனால் பெரும் சண்டைகள் கூட மக்களுக்கிடையே நடக்கின்ற சூழ்நிலை காணப்படுகின்றது.

அத்துடன் 30 ஆண்டுகளுக்கு அதிகமாக இந்தப் பகுதியில் வாழ்கின்ற மக்களுக்குக் கூட சொந்தமாக ஒரு காணித்துண்டு இல்லாத பரிதாப நிலைமையும் உள்ளது.

இதற்கும் தீர்வு ஏதும் மக்களுக்கு கிடைக்கவில்லை. அரச நிறுவனங்கள் கட்டியெழுப்பப்படுகின்ற வேகம், காணிகள் அதற்கு ஒதுக்கப்படுகின்ற துரிதம், மக்களுக்கு ஒரு துண்டு காணி வழங்குவதில் அல்லது காணிகளுக்கான உரிமைகளை வழங்குவதில் இல்லை. இந்த நிலை மந்தகதி நகர்வாகவே உள்ளது. ஆனால், அரச தேவைகளுக்காக காணிகளிலிருந்து மக்களை எழுப்புவதற்கு மட்டும் அதிவேகம் காட்டப்படுகின்றது. இந்த அக்கறையற்ற தன்மைகளால் சாதாரண மக்களே துன்பமடைகின்றனர். மக்களிடம் பிணக்குகள் ஏற்படுகின்ற வாய்ப்புக்களுக்கான காரணிகள் தவிர்க்கப்படவேண்டும்.

ஏமாற்றுதல்களும், ஏமாறுதல்கள் நடப்பதை தடுக்க வேண்டுமெனில், இந்தப் பகுதி மக்களின் காணிகள் உரிமம் தொடர்பாக துரிதமாகத் தீர்வுகாணப்படவேண்டும். (த)

## வீதிகளில் 50 அடிக்கு அப்பால் கட்டடங்களை அமைக்க கோரிக்கை

கிளிநொச்சி, பூநகரி - மன்னார் வீதி, சங்குப்பிட்டி போன்ற பிரதான வீதிகளில், வீதியிலிருந்து 50 அடிக்கு அப்பால் கட்டடங்களை கட்டுமாறு பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

மூன்று வார காலப் பகுதியில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பெயர்ப் பலகைகள் ஒரு வாரத்துள் அகற்றப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விதியை மீறுவோர் மீது பிரதேச சபை சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

## துர்நாற்றம் வீசும் பொதுச்சந்தை கழிப்பறை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பொதுச் சந்தைப் பகுதியிலுள்ள கழிப்பறைகள் சுத்தம் செய்யப்படாததால் துர்நாற்றம் வீசுவதாகத் தெரிய வருகிறது.

இதனால் சந்தைச் சுற்றாடலிலுள்ள வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் பலத்த அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இந்தக் கழிப்பறைகள் கரைச்சிப் பிரதேச சபையால் அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

### விமான குண்டு வீச்சால்

## படுகொலை செய்யப்பட்ட மக்களின் நான்காம் ஆண்டு நினைவுநாள்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு - மந்துவில் பகுதியில் விமானக் குண்டுவீச்சால் 1999 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் நான்காம் ஆண்டு நினைவுநாள் கடந்த 15 ஆம் திகதி புதன்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

மந்துவில் பகுதியில் மக்கள் குடியிருப்புகள் மீது கண்மூடித்தன மாக மேற்கொள்ளப்பட்ட குண்டுவீச்சால் 22 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், பலர் காயமடைந்திருந்தனர்.

நான்காம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வு மந்துவிலில் அமைந்துள்ள நினைவுக்கல் வளாகத்தில் புதுக்குடியிருப்பு தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் கனகசுந்தரசுவாமி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் புதுக்குடியிருப்புப் பிரதேச பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும், அரச சார்பற்ற நிறுவனத்தின் பிரதிநிதிகளும், பொது மக்களும் கலந்து கொண்டனர்.

## பொது நோக்கு மண்டபம் ஐயங்கன்குளத்தில் திறப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - ஐயங்கன்குளத்தில் பொது நோக்கு மண்டபம் ஒன்று கடந்த புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு ஐயங்கன்குள கிராமிய அபிவிருத்திக் குழுத் தலைவர் புண்ணிய மூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை துணுக்காய்ப் பிரதேச காணி அலுவலர் வல்லிபுரம் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வின் தேசியக் கொடியை வலயப் பொறுப்பாளர் இளம்பிறை ஏற்றி வைத்தார். பொது நோக்கு மண்டபத்தின் நாடாவை துணுக்காய்ப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் புனிதன் வெட்டி திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து வரவேற்புரையை காணி அலுவலர் வல்லிபுரம் நிகழ்த்தினார். சிறப்புரையை கிராம அபிவிருத்தி அலுவலர் ரவிகரன் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் பொதுமக்கள், போராளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் செயலாளர்களுக்கான கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கல்வி வலய அபிவிருத்திச் சங்கச் செயலாளர்களுக்கான கலந்துரையாடல் புதன்கிழமை மாலை 2.30 மணியளவில் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய மண்டபத்தில் கிராம சேவையாளர் பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலானது முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ கல்விக் கழகத்தின் ஒழுங்குபடுத்தலின் கீழ் முதன்முறையாக இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள ஆசிரியர் தினத்தைக் கொண்டாடுவது தொடர்பாகப் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கரைதுறைப்பற்று கோட்டக் கல்வி அதிகாரி நா.தியாகராசா, இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தின் செயலாளர் செல்வநாயகம், முல்லைத்தீவு மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் பாரதி ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

இந்த நிகழ்வில் சிறப்புரையை முல்லைத்தீவு மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் அறிவன்பன் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாடசாலை சார்பாக பெரும்பாலான செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

இதேபோன்ற கலந்துரையாடல்கள் துணுக்காய் கல்வி வலயத்திலும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

## போதைப் பொருள் கடத்தியவர் மன்னார் பொலிஸாரால் கைது

(மன்னார்)

மன்னார் முருங்கன் பகுதியில் லொறியில் மறைத்து வைத்து கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்ட நான்கு கிலோகிராம் ஹெரோயின் போதைப் பொருளை மன்னார் பொலிஸார் கைப்பற்றியதுடன், லொறியிலிருந்தவர்களையும் கைது செய்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு ஏழு மணியளவில் நடந்த இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

மன்னார் - பேசாலையிலிருந்து கொழும்புக்கு மீன் ஏற்றிச் சென்ற லொறியை முருங்கன் செட்டியார் கட்டைப் பகுதியில் வழிமறித்த பொலிஸார் சோதனையிட்டனர். இதன் போது சாரதியின் இருக்கைக்கு கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதைப் பொருள் பொலிஸாரின் சோதனையில் சிக்கியது.

இதனையடுத்து பொலிஸார் லொறிச் சாரதியை கைது செய்ததுடன், லொறியையும் தடுத்து வைத்தனர்.

இதன் பின்னர் நேற்று இவரை மன்னார் மாவட்ட நீதிமன்றில் பொலிஸார் ஆஜர் செய்தவேளை 15 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

## கணினிப் பயிற்சிநெறி ஆரம்பம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசிய பயிலுனர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையால் கணினிப் பயிற்சிநெறி ஒன்று மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறி முல்லைத்தீவு மகாவித்தியால்யத்தில் நடைபெறவுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட தொழிற்பயிற்சிப் பரிசோதகர் நா.தே.ரத்னகுமார் தெரிவித்தார்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*தகுதி எனஒன்று நன்றே பகுதியால்*
*பாற்பட்டு ஒழுகப் பெறின்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## நீதியற்றவகையிலான நிதியுதவிகள்

சிறிலங்கா அரசின் கெஞ்சலுக்கு சர்வதேச நாடுகள் சில - அதுவும் சமாதானத்தை வலியுறுத்திவரும் நாடுகளே- முன்னர் நிபந்தனை உறுதியளித்தமைக்கு மாறாக நிதி உதவி வழங்க முன்வந்துள்ளமையானது, தமிழ் மக்கள் மத்தியில் இந்த நிதியுதவி வழங்க முன்வந்துள்ள நாடுகளின் வாய்மைமீது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

முன்னர் - கடந்த ஐக்கியதேசிய முன்னணியின் ஆட்சிக்காலத்தின்போது, சமாதானப்பேச்சுவார்த்தை நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டபோது, சிறிலங்காவுக்கு நிதியுதவி வழங்கும் நாடுகளின் மாநாடு ஜப்பானின் - டோக்கியோ நகரில் நடைபெற்றபோது, முடிவில் முன்னெப்போதும் இல்லாதவகையில் பெருந்தொகையான நிதியுதவியை வழங்குவதற்கு அந்த நாடுகள் உறுதியளித்தபோது, சிறிலங்கா அரசு பிரமிப்படைந்தது உண்மையே.

அப்போது, அந்த பெருந்தொகைப் பணத்தை சமாதான முயற்சிகளின் முன்னேற்ற வளர்ச்சியை மதிப்பீடு செய்து அதற்கேற்பவே வழங்கப்படும் எனவும், அந்த நாடுகள் நிபந்தனையொன்றை விதித்தபோது, அப்போதைய நிலையில் அது ஒன்றும் பெரியவிடயமாக சிங்கள ஆட்சியாளர்களால் கருதப்படவில்லை.

அந்த டோக்கியோ மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தபோதிலும், அதற்கு முன்னர் வொஷிங்டனில் நடந்த மாநாட்டில் தங்களைக் கலந்துகொள்ள அழைக்காததால் இந்த அழைப்பையும் விடுதலைப்புலிகள் நிராகரித்திருந்தனர்.

விடுதலைப் புலிகளையும் அதில் கலந்துகொள்ள வைத்து அவர்களது அங்கீகாரத்துடன்தான் சிறிலங்காவுக்கு அத்தகைய பெரியதொகை நிதியை நீண்டகாலக் கடனடிப்படையில் வழங்க சர்வதேச சமூகம் உறுதியளித்தது எனக் காட்ட ஜப்பான் மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் செய்த முயற்சியும், போட்டதிட்டமும் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது.

அதுகையளிக்கப்பட்ட அடுத்தடுத்த நாட்களில், பிரதமர் ரணில் நாட்டில் இல்லாதவேளை, ஜனாதிபதி சட்டரீதியிலான அரசியல் சதி நடவடிக்கையொன்றை அதிரடியாக மேற்கொண்டு ஆட்சியைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட்டார்.

சமாதான நகர்வுகள் அத்துடன் நிரந்தரமாகவே நின்றுபோய்விட்டது. தேர்தல் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த, ஆட்சியமைத்த புதிய ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியானது சமாதான எதிர்ப்பாளர்களின் பலமோங்கியிருந்த ஒரு பலவீனமான அரசாங்கத்தையே உருவாக்கியது.

இன்றைய அந்தப் பலவீனமான, ஆனால் பலமான சமாதான எதிர்ப்பு சக்திகளை உள்ளடக்கிய அரசு எந்த வகையிலும், சமாதான முயற்சிகளில் ஆர்வமோ, அக்கறையோ அற்ற இனவாத அரசாக இருப்பதால் சமாதான முன்னெடுப்புக்கள் ஒரு மில்லிமீற்றர்தானும் இந்த மூன்று மாதகாலப்பகுதியில் நகரவில்லை. என்பது ஒருபுறமிருக்க ஏற்கனவே அமுலில் இருந்துவரும் புரிந்துணர்வு மற்றும் போர்நிறுத்தசூழலுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையில் மீண்டும் போர்குறித்த அச்சநிலை மக்களை பீதிகொள்ளவும் வைத்துள்ளது.

இதேவேளை, சமாதான முயற்சிகளை புறந்தள்ளி வைத்துவிட்டு அதனடிப்படையில் டோக்கியோ மாநாட்டில் வழங்க உறுதியளித்த கடன்நிதியைப் பெற்றுக்கொள்வதில் பகீரதமுயற்சியை அரசுமேற்கொள்ளத்தொடங்கியுள்ளது.

வெறுமையான திறைசேரியும், சரிவுநிலையில் செல்லும் பொருளாதார வளர்ச்சிவீதமும் அரசைத் தொடர்ந்து இயங்கமுடியாத சூழலையே ஏற்படுத்தியுள்ள நிலையில், மீண்டும் சமாதான முயற்சிகளை ஆரம்பிக்கத் தீவிரம் காட்டுவதுபோன்று நடித்துக்கொண்டு, எப்படியாவது நிதியுதவிகளைப் பெறவே சந்திரிகா கடும் தந்திரோபாய வியூகங்களை வகுக்கத்தொடங்கியுள்ளார்.

அண்மையில் தனது பிரதான ஆலோசகரும், வெளியுறவு அமைச்சரும், விசுவாசியுமான லக்ஷ்மன் கதிர்காமரை உலகெங்கும் அனுப்பி யாசகம் கேட்கவைத்த முயற்சிக்கு பலன்கிடைத்துள்ளதுபோல் தெரிகிறது.

ஜப்பான் இலங்கைக்கான உதவிகளை வழங்குவதற்கு சமாதானத்தை நிபந்தனையாக விதிக்கக்கூடாது. என அழாக்குறையாக ஜப்பானில்வைத்து கதிர்காமர் கெஞ்சிய கெஞ்சலுக்கு பலன்கிடைத்துள்ளதுபோல் தெரிகிறது.

ஜப்பான் அரசு உடனடியாக ஒருதொகையை நெருக்கடிகால நிதியாக வழங்க சம்மதித்துள்ளதை அடுத்து அமெரிக்காவும், நோர்வேயும்கூட நிதியுதவியை வழங்க உறுதியளித்துள்ளமையானது பேரினவாத - சமாதான விரோதிகளின் அரசுக்கு உற்சாகமூட்டும் செய்தியேயாகும்.

இந்த நிதியுதவிகளுக்கான உறுதியானது எந்த நிபந்தனைகளின் அடிப்படையிலும், வழங்கப்படவில்லை என்பதால் அரசு இதனை எந்தவகையிலும் பயன்படுத்தவும் முடியும்.

ஏன் இராணுவத்தேவைகளுக்கும்கூட பயன்படுத்த முடியும்!

எந்தவகையில் பார்த்தாலும் இந்த நிதி சமாதான முயற்சிகளுக்கும் எதிர்ப்பைக் காட்டும் ஒரு அணியினருக்கு- அரசாக இருந்தாலும்கூட - உதவியளிக்கும் ஒன்றேயாகும்.

நிதிநெருக்கடி காரணமாகவேனும், சமாதானப் பேச்சுகளுக்கு இறங்கிவந்தாகவேண்டிய அழுத்த நிலையில் இருந்து அரசு தப்பித்துக்கொள்வதற்கு அமெரிக்கா, ஜப்பான், நோர்வே ஆகிய மூன்று நாடுகளும் நிதியுதவி வழங்கி உதவியுள்ளது என்றால் அது உண்மையேயாகும்.

சமாதானத்தைத்தொடர விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்ள விடுதலைப் புலிகள் முன்வரவேண்டும் என அறிவுறுத்தி அழுத்தம்தர முயலும் நாடுகள் பேச்சுவார்த்தைகளின் பிரதான பங்காளியான அரசின் மீது அழுத்தங்களைக் கொடுப்பதில் மென்போக்கை கடைப்பிடிப்பதானது, சமாதான முயற்சிகளின் எதிர்காலத்தைப் பாதிக்கச் செய்வதுடன், சமாதான எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு பக்கபலமாக ஆதரவு நிலையை ஏற்படுத்தவும் கூடும்.

## நாடும் நடப்பும்




# இருபதாம் நூற்றாண்டு ஈழத்து கவிதைகளை தொகுக்க ஏற்பாடு

## அனுப்பி உதவுமாறு கவிஞர்களிடம் கோரிக்கை

(கொழும்பு)

கடந்த 20 ஆம் நூற்றாண்டு வெளிவந்த தரமான ஈழத்துக் கவிதைகளை ஒரே தொகுப்பாக வெளியிடவுள்ளதாக பூபாலசிங்கம் புத்தகசாலை உரிமையாளர் ஸ்ரீதரசிங் தெரிவித்தார்.

தமிழ்க்கவிதை வரலாற்றில் ஈழத்துக் கவிதைகள் 20 ஆம் நூற்றாண்டிலேயே கவனிப்புக்குரியனவாகவும், முக்கியத்துவமுடையனவாகவும் அமைகின்றன. எனவே, 20 ஆம் நூற்றாண்டு ஈழத்துக் கவிதைகளை ஒரே பார்வையில் நோக்கக்கூடியதான தொகுப்பு முயற்சியொன்று மிகவும் அவசியமானதாகும். எனவே ஆ.சதாசிவம் சுதந்திரகாலத்துக்கு முற்பட்ட ஈழத்துக் கவிதைகளை 'ஈழத்துத் தமிழ்க் களஞ்சியம்' என்னும் தலைப்பில் தொகுத்தளித்துள்ளார். அந்தத் தொகுப்புக்குப் பின்பும் மரணத்துள் வாழ்வோம், வேற்றாகி நின்றவெளி, ஈழத்துக் கவிதைக்கனிகள் முதலிய தொகுப்பு நூல்கள் சில வெளிவந்துள்ளன. எனினும் இந்தத் தொகுப்பு நூல்களிலும் அடக்கப்படாத தரமான கவிதைகள் பல காணப்படுகின்றன.

இந்த நிலையிலேயே, கட்சி, குழு பேதமின்றி நடுவுநிலையோடு தரமான ஈழத்துக் கவிதைகளைத் தொகுக்க இருப்பதாகவும், அந்தத் தொகுதிக்குப் பயன்செய்யத்தக்க தமது நூல்களையும், இதழ்களில் வெளிவந்த கவிதைகளின் போட்டோப்பிரதிகளையும் கவிஞர்கள் அனுப்பி உதவவேண்டும் என்றும் பூ.ஸ்ரீதரசிங் தெரிவித்துள்ளார்.

தமது கவிதை நூல்களில் மேலதிக பிரதிகள் இல்லாதோர் அவற்றுள் வெளிவந்த மிகத் தரமான சில படைப்புகளைப் போட்டோப்பிரதி எடுத்துப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி உதவலாம். அமரர்களாகிவிட்ட கவிஞர்களுடைய படைப்புகளை அவர்களுடைய குடும்பத்தினரோ, நண்பர்களோ அனுப்பி உதவும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கவிதைகளை அனுப்புவோர் கூடவே கவிதை வெளிவந்த நூலின் பெயர், வெளியிட்ட ஆண்டு, வெளியீட்டாளர் விபரம், கவிதை வெளிவந்துள்ள பக்கவிபரம் போன்றவற்றை நிச்சயமாக இணைத்து அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். புனைபெயர்களில் கவிதைகளைப் பிரசுரிக்க விரும்புவோர் தமது சொந்தப் பெயர் விபரத்தையும் இணைத்து அனுப்பவும். சகல கவிஞர்களும் தங்களது சுருக்கமான சுயவிபரக் கோவைகளை இணைத்து அனுப்பவும்.

கவிதைகள் யாவும் தரமான நடுவர்குழுவினால் தேர்ந்தெடுக்கப்படும். ஈழத்துக் கவிதைகள்பற்றி தமிழ்நாடு உள்ளிட்ட பிறநாடுகளில் போதிய அறிமுகம் இன்னும் ஏற்படாமையால், வெளியிடப்படவுள்ள தொகுப்பைத் தமிழ்நாட்டில் பிரசுரிப்பதெனத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொகுப்பு - கொழும்பு செட்டியார் தெருவில் மிக விரைவில் திறந்துவைக்கப்படவுள்ள பூபாலசிங்கம் புத்தகசாலையின் புதிய காட்சியறையின் திறப்புவிழாவின்போது வெளியிடப்படவுள்ளது. கவிதை நூல்களையும், கவிதைகளையும் **'Compiler - Tamil Poems, R.P.Sritharashing, Poobalasingam Book Depot, 340 Sea Street, Colombo - 11'** எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

## வெஸ்ரேன் யூனியன் அதிர்ஷ்டசாலிகளுக்கு நேற்று பரிசில்கள் வழங்கப்பட்டன

'வெஸ்ரேன் யூனியன்' பணப்பரிமாற்றம் செய்யும் நிறுவனத்தால் நல்லூர் உற்சவகால சீட்டிழுப்பில் கலந்துகொண்டு வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நேற்றுக் காலை 10 மணியளவில் நல்லூர் முன்றில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட இடத்தில் நடைபெற்றது.

இதில் வெற்றி இலக்கங்களை, நல்லூர் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம், நல்லூர் பிரதேச செயலக நிர்வாக அதிகாரி ஆகியோர் தெரிவுசெய்தனர்.

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை கொழும்பில் இருந்து வருகைதந்த 'வெஸ்ரேன் யூனியன்' பணிப்பாளர் 'ஏரியன் கொரேரா' வழங்கினார்.

இந்தச் சீட்டிழுப்பில் துவிச்சக்கர வண்டியைப் பரிசாகப் பெற்றுக்கொள்ள முதல் ஐந்துபேர் தெரிவுசெய்யப்பட்டனர். அவர்கள் - யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செபஸ்தியாம்பிள்ளை தர்மேந்திரன், அரியாலையைச் சேர்ந்த யோ.ஜெலறோஸ், திருநெல்வேலியைச் சேர்ந்த சண்முகநாதன் ஜீவிதன், திருநெல்வேலியைச் சேர்ந்த கைலாயநாதன் சஜீவ், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவகுரு சிவதீஸ் ஆகியோர் ஆவர்.

இவர்களுடன் ஏனைய ஆறுதல் பரிசுபெற்ற 50 பேர்களின் விபரம் பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## கூட்டுறவுச் சங்க கிளைகள் உரிய நேரத்தை பின்பற்றுவதில்லை

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உரிய நேர ஒழுங்குகளைப் பின்பற்றாமையால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

இது குறித்துத் தெரியவருவதாவது - யாழ்.மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கடைகள் உரிய நேரத்துக்குத் திறந்து சேவைபுரிவதில்லை. அதேபோல் கடை பூட்டப்படும் நேரமும் அந்தக் கடையின் முகாமையாளர் நினைததபடி தீர்மானிக்கப்படுகிறது.

இதனால், ஓரளவு மலிவான விலையில் பெறக்கூடிய பொருட்களைப் பெறுவதற்கு கூட்டுறவுச் சங்கக்கடைகளுக்குச் செல்வோரும், நிவாரணம் பெறும்பொருட்டு அங்கு செல்வோரும் வெகுநேரம் காத்துநிற்கவோ அல்லது ஏமாற்றத்துடன் திரும்பவோ நேரிடுவதனைக் காணமுடிகிறது.

இதேவேளை, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கடைகள் சில வரையறுக்கப்பட்ட விலையிலும்பார்க்க அதிகமான விலைக்குப் பொருட்களை விற்பனை செய்வதுடன், பொருட்களைக் கொள்வனவு செய்யும் பொதுமக்களுக்கு மிகுதிப் பணம்வழங்கும்போது சில்லறைத் தட்டுப்பாட்டைக் காரணம் காட்டி கடதாசிப்பையையோ அல்லது ரிசு பையையோ அல்லது இனிப்பு வகைகளையோ கொடுத்துப் பொதுமக்களை ஏமாற்றி வருவதாகவும் மக்கள் விசனம் தெரிவித்து வருகின்றனர்.

# வேலை வாய்ப்புக்களைப் பெற விரும்புவோர் வணிகர் கழகத்துடன் தொடர்பு கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

வேலைவாய்ப்பற்று இருக்கும் இளைஞர், யுவதிகளின் நன்மை கருதி, யாழ்.மாவட்ட வணிகர் கழகம் - தொழில் வழங்கல் மையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இதனடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் வேலை வாய்ப்பற்று இருக்கும் அனைவரும் யாழ். மாவட்ட வணிகர் கழகத்திடம் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

வேலைவாய்ப்பற்று இருக்கும் இளைஞர், யுவதிகள் தமது கல்வித் தகைமைக்கு ஏற்றவாறு கணக்காளர், சிட்டை எழுதுவினைஞர், கணினி இயக்குநர், விற்பனையாளர், அலுவலக உதவியாளர், விநியோகப் பணியாளர், சாரதி, கூலியாள் ஆகிய பணிகளுக்கு உரிய தகைமையுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப்படிவங்களை யாழ்.வணிகர் கழகத்தில் பெற்றுக்கொண்டு எதிர்வரும் 20 ஆம் திகதிமுதல் விண்ணப்பிக்க முடியும்.

இதேவேளை, தமது வர்த்தக நிலையங்களில் பணியாளர்கள் வெற்றிடமுள்ள வர்த்தக நிலைய உரிமையாளர்கள், எதிர்வரும் 1 ஆம் திகதிமுதல் தமக்கு வெற்றிடமாகவுள்ள பணியாளர் தரங்களைக் குறிப்பிட்ட வர்த்தக சங்கத்தின் மூலம விண்ணப்பித்து பணியாளர்களைச் சேர்த்துக்கொள்ள முடியுமென யாழ்.வர்த்தக சங்கத் தலைவர் தெரிவித்தார்.

தற்போது யாழ்.குடாநாட்டிலுள்ள வர்த்தக நிலையங்களிலுள்ள பணியாளர் வெற்றிடங்களுக்கு அமைய மிக விரைவாக வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

## தியாகி திலீபன் நினைவாக....

**ஆண்டுகள் பதினேழு ஓடிவிட்டன. ஆனால், எல்லாமே நேற்று நடந்தவைகள் போல நெஞ்சத்திலேயும், கண்ணிலேயும் காட்சிதந்து கொண்டிருக்கின்றன. அந்த வீரத்தாயின் ஆசியுடன் உண்ணா நோன்பு மேடையிலே ஏறித்தனது போராட்டத்தைத் தொடக்கிய காட்சி. தங்கள் மகனே உண்ணாநோன்பு இருப்பது போல் தாய்மார் நல்லூர் வீதியிலே குழுமியகாட்சி.**



# திலீபனின் நினைவு நாட்கள் தமிழ் மக்களின் எழுச்சி நாட்களாக வேண்டும்...

ஓர் இனத்தின் விடுதலைப் போராட்டம் வரலாற்றில் பதியப்படும்பொழுது, அந்தப் போராட்டத்தை வழி நடத்தும் தலைமை, தலைமையுடன் இணைந்து செயற்படும் தளபதிகள், போராட்ட வடிவு, இக்கட்டான பொழுதில் எதிர்கொள்ளும் அணுகுமுறை, ஆக்கிரமிப்பாளனை திகைக்க வைக்கும் போரியல் நுணுக்கங்கள், போராட்ட வடிவமாற்றம் போன்ற பலவும் அங்கே பதியப்படும். அந்த வகையில் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றுப் பதிவில் ஓர் இணையற்ற தலைவராகத் தமிழீழத் தேசியத் தலைவர் அமைகின்றார். கடந்த இரண்டாயிரம் ஆண்டுத் தமிழர் வரலாற்றில் வேலுப்பிள்ளை பிரபாகரன் போன்ற சிறந்த தலைவரும், வீரனும் கிடைக்கவில்லை என்று காலஞ்சென்ற முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் கூறியிருப்பது கூர்ந்து கவனிக்கத் தக்கது.

இத்தலைவனது வழியில் தன்னை ஈடுபடுத்தி, ஆயுதப் போராட்டத்திலும் சரி, ஆயுதமற்ற போராட்டத்திலும் சரி தனக்கென ஓர் இடத்தைப் பிடித்து வரலாற்றில் பதியப்பட்ட தளபதிதான் திலீபன் என அழைக்கப்படும் இராசையா பார்த்திபன்.

ஆண்டுகள் பதினேழு ஓடிவிட்டன. ஆனால், எல்லாமே நேற்று நடந்தவை போல நெஞ்சத்திலேயும், கண்ணிலேயும் காட்சிதந்து கொண்டிருக்கின்றன. அந்த வீரத்தாயின் ஆசியுடன் உண்ணா நோன்பு மேடையிலே ஏறித்தனது போராட்டத்தைத் தொடக்கிய காட்சி. மக்கள் வந்து தங்கள் மகனே உண்ணாநோன்பு இருப்பது போல் தாய்களும் நல்லூர் வீதியிலே குழுமியகாட்சி.

மாணவ மாணவியர் வெள்ளை உடையுடன் வந்து திலீபனின் உண்ணா நோன்பை ஊக்குவித்துப் பங்குகொண்ட காட்சிகள், உண்ணாவிரத மேடையிலே பள்ளி மாணவ மாணவிகளின் கவிதைகள், வீர உரைகளின் காட்சிகள், பொது மக்களின் உரைகள் எவையுமே தற்பொழுதும் காதில் கேட்பது போன்ற நினைவுதான் உள்ளது. அந்த மேடையிலே திலீபன் ஆற்றிய முதலாவது உரை, கவிஞர் காசி ஆனந்தனின் 'திலீபன் அணைப்பது சாவையா? இந்த சின்ன வயதில் இது தேவையா' என்ற கவிதை, துரோகிகளால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட கருணானந்த சிவத்தின் உணர்ச்சி மிகுந்த உரை, அதன் பின்பு எழுந்த திலீபன் தனது உண்ணா நோன்பின் நோக்கம்பற்றிய இரண்டாவது உரையை நிகழ்த்தியமை பின்னர், செப்ரெம்பர் 26இல் மருத்துவ நிபுணர் வந்து வீரச்சாவை உறுதி செய்தபொழுது, மக்கள் கொண்ட கவலை, உணர்ச்சி என்பவை என்றுமே மறக்க முடியாதவைகளாகும்.

இவ்வாறான வரலாற்றுக் காலத்தில், இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்வது ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஒரு பெருமிதத்தை ஏற்படுத்தும். அதாவது போராட்டம் என்பது போராளிகளால் மட்டும் நடத்தப்படுவதன்று. மக்களின் முழுமையான பங்களிப்பு அதற்குத் தேவை. அதனால் தான் "மக்கள் புரட்சி வெடிக்கட்டும், சுதந்திர தமிழீழம் மலரட்டும்" என்று உண்ணா நோன்பு மேடையில் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார் தியாக தீபம் திலீபன்.

656 போராளிகளின் ஈகத்தால் அன்று உரமிடப்பட்ட விடுதலைவேள்ளி இன்று 18000 போராளிகளின் ஈகத்தால் உலகம் வியக்கும் வண்ணம் வளர்ந்து நிற்கின்றது. இந்த வளர்ச்சி விரைவில் முழுமையடைந்து தமிழ் மக்கள் விடுதலைபெற வழிவகுக்கும்.

இந்த நேரத்தில் திலீபனது நினைவு நாட்களில் வெறுமனே ஈகத்தையும், வீரத்தையும் போற்றுவதுடன், தமிழ் மக்கள் நின்றுவிடக் கூடாது. எனவேதான் இந்நினைவு நாட்களை தமிழ் எழுச்சி நாட்களாக நினைவு கூரும்படி கோரிக்கைவிடப்பட்டுள்ளது. தமிழ் மொழிக்காக, தமிழ்ப் பண்பாட்டுக்காகப் போரிட்ட தமிழினம், பெயரில் தமிழீழத்தை அடைந்து விட்டு, தமிழ் மொழியையும், தமிழ்ப் பண்பாட்டையும், இழந்துவிடக்கூடாது. இதுதான் இன்றைய முதன்மைத் தேவையாகும். தீலீபன் தமிழ் மொழியின் மீதும், பயன்பாட்டின் மீதும் மிகவும் அக்கறை கொண்டவராகத் திகழ்ந்தார். அவருடன் இருந்த போராளிகள் தீலீபன் நினைவாக ஆற்றிய உரைகளில் திலீபனின் மொழிப்பற்றை எடுத்துக் கூறியவையே இவற்றுக்குச் சான்றாகும்.

"வாக்கி டோக்கி" என்றுதான் பலரும் சொல்வார்கள். சிலர் தமிழில் சொல்ல வேண்டும் என்பதற்காக பொருத்தமில்லாத சொற்களையும் பாவித்துள்ளனர். ஆனால், திலீபன் மிகவும் சிறந்த ஏற்கத்தக்க சொல்லைப் பயன்படுத்தியதாகக் கூறுவார்கள்.

மூத்த போராளிகள், யாராவது சிலர் திலீபன் பாவித்த வாக்கி டோக்கி என்ற கருவிக்கும் "ஃஹலோ" என்ற ஆங்கிலச் சொல்லுக்கும் இணையாகப் பயன்படுத்திய சொற்களை அறியத்தந்தால் சிறப்பாகவும், நன்றியாகவும் இருக்கும்".

இதே போன்று "ஃஹலோ" என்ற ஆங்கிலச் சொல்லை யும் பயன்படுத்தாது எவ்வாறு தமிழில் உரையாடுவது என்று போராளிகளுக்குக் கூறியுள்ளார். அதாவது எங்கெங்கு தமிழ்ச் சொற்களை தமிழ் மொழியைப் பயன்படுத்த வேண்டுமோ அங்கெல்லாம் தமிழ்மொழி துலங்கவேண்டும் என்பது திலீபனின் வேட்கை. வெறுமனே ஆக்கிரமிப்பிலிருந்து மண்ணை மீட்பது மாத்திரம் நோக்கமாக இல்லாமல், அது என்றும் தமிழ் மணம் கமழும் மண்ணாக இருக்க வேண்டும் என்பது தான் போராட்டத்தின் நோக்கம் என்று திலீபன் நம்பினார்.

எனவே பழைய பெருமைகளை மட்டும் நாம் பேசிக் கொண்டிராது தமிழ் மொழியை எங்கும், எப்பொழுதும் பயன்படுத்த நாம் பழகிக்கொள்ள வேண்டும். தமிழ்ப் பெயர்களைப் பிள்ளைகளுக்கு வைக்கவேண்டும். போராளி கள் மட்டும் தமது குழந்தைகளுக்குத் தமிழ்ப் பெயர்களைச் சூட்டுவதில் இன்று முன் நிற்கிறார்கள். இந்த வழக்கம் எல்லாத் தமிழ் நெஞ்சங்களிலும் ஏற்படவேண்டும். சூரிய நாராயண சாஸ்திரி, பரிதிமாற் கலைஞர் ஆனார். வேதாசலம் மறைமலை அடிகளானார். இந்த மாற்றங்கள் நடைபெற்று எத்தனையோ ஆண்டுகள் போய் விட்டன. அதன் பின்னர் திராவிட இயக்க வளர்ச்சியின் தொடக்க காலத்தில் தமிழ்ப் பெயர்கள் வைப்பது நாகரிகமாயிற்று. ஆனால், திராவிட இயக்கங் களின் அரசியல் நுழைவும், பிளவுகளும் தமிழ் மொழியின் எழுச்சியைக் குறைத்தன என்றும் சொல்லலாம். முற்றாக இல்லாமல் செய்து விட்டன என்றும் சொல்லலாம். இதே நேரத்தில் இவ்வெழுச்சியைத் தடை செய்யப் பெரிய ஒரு சூழ்ச்சி இடம்பெற்றது. அதுதான் எண் சோதிடம். தமிழ்ப் பெயர்களுக்கு ஆங்கில எழுத்துக்களை வைத்து எண் சோதிடம் பார்த்து ஒரு மூடநம்பிக்கையை தமிழ் நாட்டில் ஏற்படுத்தினார்கள். அது மெல்ல மெல்ல ஈழத்தையும் எட்டியது. இதன் தாக்கம் தான் உச்சரிக்க முடியாத, பொருள் விளங்காத எந்த மொழிக்குள்ளும் அடங்காத பெயர்களாக வைக்கப்படுகின்றன. எங்கள் மொழியிலுள்ள இனிமையுடைய 'ழ' கரவரிசைக்கோ, 'ள' கர வரிசைக்கோ 'ண' கரவரிசைக்கே நிகரான ஆங்கில எழுத்து இல்லாத நிலையில், 'ந' கரவரிசைக்கும் 'ன' கரவரிசைக்கும் வித்தியாசம் கிடைக்கப்பெறாத ஆங்கில மொழியில் எழுதிப் பெயர் வைப்பது ஏற்புடையதா? தமிழ் மொழி காக்கப் புறப்பட்டு இன்று உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ள நாம் தமிழ்ப் பெயர்களை வைக்கக் கூடாதா? நாம் தமிழர்களாக எம்மை அடையாளப்படுத்த வேண்டும். அதற்காகத் தமிழ்ப் பெயர்களை எங்கும் பயன்படுத்தவேண்டும்... மனிதர்கள் மட்டும் தமிழ்ப் பெயர்களுடன் நில்லாது- இல்லங்களுக்கும், வணிக நிறுவனங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் தமிழில் பெயரிடுதல் வேண்டும். பிள்ளைகளுக்கு புரியாத பெயர்களை வைப்பதைப் போன்று வணிக நிலையங்களுக்கும் பெயர் வைத்து அவற்றை தமிழில் எழுதி விளங்காமல் எழுதி தமிழ் மொழியைக்காக்க முடியாது. செய்தித் தாள்கள் நல்ல தமிழை எழுத வேண்டும். வண்ண விளம்பரங்களை கலர் விளம்பரம் என்பதுபோல் ஆங்கிலச் சொற்களை அகற்றி நல்ல தமிழில் செய்தித் தாள்கள் எழுதினால் மக்களும் அதைப் பின்பற்றுவார்கள். இதை விடுத்து வெறுமனே தமிழை வளர்க்கவேண்டும். தமிழைப் பாவிக்கவேண்டும் என்று கட்டுரைகளை வெளியிடுவதுடன் நில்லாது விளம்பரங்களையும் தமிழில் வெளியிட வேண்டும். செய்தித் தாள்களின் தாக்கம் நல்ல பலனைத் தரும்.

தொலைக்காட்சிகளின் நிகழ்ச்சித் தலைப்புகள் எல்லாம் ஆங்கிலம், நிகழ்ச்சியில் மாந்தர் பேசுவது 75வீதம் ஆங்கிலம் 25 வீதம் தமிழ். இந்த நிகழ்ச்சிகளையே நாம் எல்லோரும் பார்க்கின்றோம். இதன் விளைவுகள் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இவற்றையெல்லாம் நீக்க வேண்டியது செய்தித் தாள்களின் பெரும் கடமையாகும்.

திலீபனின் நினைவு நாட்களை தமிழ் மொழியின் எழுச்சி நாள்களாக நாம் கருதி அதற்குரிய பங்களிப்பை வழங்கவேண்டும்.



இப்பொழுது தொடங்கும் தமிழ் மொழியின் எழுச்சி நாள் தொடரவேண்டும். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற நிலைவரவேண்டும். உலகிலுள்ள பெரும்பாலான இனங்கள் தங்கள் மொழிகளிலேயே தங்கள் கடமைகளை நிறைவேற்றுகின்றனர். சிங்களமக்கள் சிங்களத்தை விரும்புவது போல், இந்திமொழியினர் இந்தியை விரும்புவது போல், கர்நாடகத்தவர் கர்நாடகத்தை விரும்புவது போல், தெலுங்கர் தெலுங்கை விரும்புவதுபோல் ரஷ்யர்கள் ரஷ்ய மொழியை விரும்புவது போல். ஜப்பானியர், ஜேர்மனியர் என்று எல்லா இன மக்களும் தங்கள் தங்கள் மொழியை விரும்புவது போல், தமிழ் மக்கள் தமிழ் மொழியை பாவிப்பது இல்லை. இந்தக் குறையை நாங்கள் நிவர்த்திக்க வேண்டும். ஆகவே, இன்று தொடக்கம் எமது செயல்கள் அனைத்தையும் தமிழ் மொழியில் ஆற்றி தமிழ் மொழியில் பெயர் சூட்டி, தமிழை வளர்த்து தமிழீழம் தமிழ் மொழியில் தலைநிமிர வைப்போம். இதுதான் தியாகி திலீபனின் ஈகத்துக்கு நாம் கொடுக்கும் பெருமதிப்பாகும்

**சிலம்பு-**

---

## இங்கிருந்து அங்கே...



நாம் பல சந்தர்ப்பங்களில் அவதானிக்க முடிகின்ற ஒரு விடயம், நாம் சந்திக்கும் மனிதர்களின் சில குறைபாடுகள். அவர்களின் இயல்பென ஆகிவிடுகின்ற, அல்லது ஆக்கப்பட்டுவிடுகின்ற நிலைமையாகும்.

ஒரு நெருக்கடியான சந்தர்ப்பத்தில் ஒரு சிலர் கூடிப்பேசி ஒரு தீர்வை எட்ட முனைந்து கொண்டிருப்பார்கள். இடையில் நுழைகின்ற ஒருவர் அல்லது அவர்களுக்குள்ளேயே ஒருவர் கூறப்பட்ட ஒரு விடயத்தை ஒரு விவாதத்துக்குரிய விடயமாக்கி அது தவறு, அப்படிச் சொல்வது மன்னிக்கமுடியாத குற்றம் என்கிற தொனியில் விடயங்களைத் திசைதிருப்ப முனைவர்.

இது ஒரு நிலை.

இத்தகைய ஒரு நிகழ்வால் தீர்வை எட்டவேண்டிய ஒரு விடயம் அவ்வாறு தீர்வையெட்டாமலேமுடியும் நிலைமையும் தோன்றிவிடுவதுண்டு.

வேறு ஒருவகை மனிதர்கள் இருக்கிறார்கள். தமக்குத் தொடர்பில்லாத விடயங்களிலெல்லாம் மூக்கை நுழைத்து, விரும்பத்தகாத நிலைமைகளை உருவாக்குவார்கள் அவர்கள்.

இது அடுத்தவர்களின் பிரச்சினை. இதில் நமது தலையீடு அநாவசியம். அவ்வாறு தலையிடுவது அநாகரிகமான ஒரு செயல் என்றெல்லாம் அவர்கள் நினைக்கமாட்டார்கள்.

எவ்வளவுதான் நெருக்கமானவர்களானாலும், சொந்தம் கொண்டோரானாலும் அவரவர்க்கு என ஒரு தனியான அந்தரங்கம் இருக்கிறது என்பதைப் பலரும் நினைத்துப் பார்ப்பதில்லை. அநாகரிகமான ஒரு ஆர்வக் கோளாறின் விளைவாக இத்தகைய தனியாள் அந்தரங்கங்களைக் குடைந்து கிளறிப் பார்ப்போரும் உள்ளார்கள்.

இவ்வாறான செயல்களெல்லாம் சாதாரண பார்வையில் சின்ன விடயங்கள் என ஒதுக்கப்பட முடியுமென்றாலும், இத்தகைய மனித குணங்கள், மனித பலவீனங்கள் நாளாவட்டத்தில் அவரவர்க்கு இயல்பான குணங்கள் என்று கூறிவிட்டு, ஒதுங்கிவிடுவோரும் இருக்கின்றனர்.

இவ்வாறு, சமூகத்துக்கும் நம்மைச் சார்ந்தோருக்கும் இடைஞ்சலாக அமையக் கூடிய குறைபாடுகளை இயல்பென வரித்துக் கொள்வது நியாயம்தானா?

"அந்தாள் இப்படித்தான். எப்பவுமே இந்தமாதிரித்தான் நடக்கும்"

என்று ஒரு பொதுத்தீர்ப்பின் நிழலில் நடமாடும் இடையூறுகளாக இருக்கும் தன்மை வரவேற்கக்கூடியதா?

சமூக மனிதர்கள் என்கிற வகையில் ஒருவருக்கு இருக்கக்கூடிய பொதுவான பொறுப்புகளை எவ்வாறு தட்டிக்கழிக்க முடியும்?

நாகரிகம், பண்பாடு என்றெல்லாம் முழங்குகிறோமே எமது உரைநடையில் இவற்றைக் கைக்கொள்வதுபோல.

சாதாரணவாழ்க்கை நடைமுறையில் இத்தகைய நயமான பண்புகள் பலரிடத்திலும் அருகிவருவது ஏன்?

அடுத்தவரை மதித்தல், அவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல், நயமாக அடுத்தோரைப் புண்படுத்தாமல் பேசுதல், இடத்துக்குப் பொருத்தமாக நடந்து கொள்ளல். இவ்வாறான நல்ல பழக்கங்கள் பெரியோரிடத்தில் இருந்தால்தானே இளையோரிடத்தில் வரமுடியும்?

**ந.சத்தியபாலா**

# இங்கிலாந்து - இலங்கை அணிகள் ஆட்டம் மழை காரணமாக நேற்று கைவிடப்பட்டது!






இங்கிலாந்தில் இடம்பெற்றுவரும மினி உலகக் கிண்ணப்போட்டியில் நேற்று றோஸ்பவுல் மைதானத்தில் இடம்பெற்ற இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான காலிறு திப்போட்டி மழை காரணமாகக் கைவிடப்பட்டது. இந்தப்போட்டி மீண் டும் இன்று இடம்பெறவுள்ளது.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணித் தலைவர் தமது அணி முதலில் களத்தடுப்பில் ஈடு படுமெனத் தெரிவித்தார். இதனால் இங்கிலாந்து அணி முதலில் துடுப் பெடுத்தாடியது. இதன்படி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான திறஸ்கொ திக், சோலங்கி ஆகியோர் களமிறங் கினர்.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 29 ஆக இருந்தபோது ம.்.ரூப் வீசிய பந்தில் குமார் சங்ககாரவிடம் பிடி கொடுத்து சோலங்கி ஆட்டமிழந் தார். இவர் 26 பந்துகளில் 18 ஓட் டங்களைப் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து களம்வந்த அணித் தலைவர் வோகன், ஸ்ரரஸ் ஆகி யோர் முறையே 5, 7 ஓட்டங்களைப் பெற்றநிலையில் ஆட்டமிழந்து சென் றனர்.

வோகன் - சொய்சாவின் பந்து வீச்சில் போல்ட் முறையிலும், ஸ்ரரஸ் ரன்அவுட் முறையிலும் ஆட் டமிழந்தனர். 32 ஓவரில் மழை குறுக் கிட்டபோது திறஸ்கொதிக் 95 பந்து களில் 7 பவுண்டரிகள் அடங்கலாக 64 ஓட்டங்களுடனும், பிளின்டொப் 21 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக் காது களத்தில் இருந்தனர்.

இங்கிலாந்து அணி 32 ஓவர் களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 118 ஓட்டஙகளைப் பெற்றிருந்த நிலையில ஆட்டம் கைவிடப்பட்டது. பந்துவீச்சில் ம.்.ரூப் 10 ஓவர்கள் பந்துவீசி 19 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து ஒரு விக்கெற்றினையும், சொய்சா 7 ஓவர்கள் பந்துவீசி 34 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.






**மினி உலகக் கிண்ணத்தில் இன்று நடைபெறும் ஆட்டம்**

**இங்கிலாந்து - இலங்கை (றோஸ்பவுல்)**

**தென் ஆபிரிக்கா - மேற்கிந்திய தீவுகள் (ஓவல்)**

# இறுதிப்போட்டியில் இந்தியாவை எதிர்கொள்ளவே விருப்பமாம்!

## அவுஸ்ரேலிய வீரர் பிரட்லீ தெரிவிப்பு



மினி உலகக்கிண்ணக் கிரிக் கெட்டில் ஒவ்வொரு நாளும் இரு வேறு அணிகள் மோதிக்கொண்டி ருந்தாலும், ஒட்டுமொத்தமாக அனை வரும் எதிர்பார்க்கும் போட்டி இந் திய - பாகிஸ்தான் இடையிலான போட்டிதான் என்று அவுஸ்ரேலிய அணியின் பந்துவீச்சாளர் பிரட்லீ தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட அவ்விரு நாடு களில் மட்டுமல்லாமல், இங்கும் நாங் கள் அனைவரும் அந்தப் போட்டி யைத்தான் எதிர்பார்த்துக் காத்தி ருக்கிறோம். இரு அணிகளுமே கென யாவை சுலபமாக வென்று தங்கள் மீதான எதிர்பார்ப்புகளை இன்னும் அதிகப்படுத்தியுள்ளன.

இநதிய அணியில் சச்சின் டெண் டுல்கர் இல்லாதது மிகப்பெரிய பின் னடைவுதான். அதை யாரும் மறுக்க முடியாது. அதேசமயம் கென்யா வுக்கு எதிராக இந்தியா விளையாடி யதைப் பார்த்தபோது சச்சின் இல்லா மலும் அவர்கள் சாதிக்கமுடியும் என்று தோன்றுகிறது.

கடந்த ஆண்டு உலகக் கோப்பை இறுதிப்போட்டியில் நாங் கள் இரு அணிகளுமே சந்தித்ததை மறுக்கமுடியாது. இந்த மினி உலகக் கோப்பை இறுதிப்போட்டியும் எங்க ளுக்கு இடையிலான போட்டியாக இருக்கவேண்டும் என்பது எனது விருப்பம் என அவர் மேலும் தெரி வித்தார்.




# ஹெவிட் - கிளின்டன் ஜோடி பெப்ரவரியில் திருமணம்!

பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த டென னிஸ் வீராங்கனை கிம் கிலிஸ்டர்ஸ் உலகின் முதல்நிலை வீராங்கனை யாக உள்ளார். 21 வயதான இவர் இதுவரை 21 பட்டங்களை வென் றுள்ளார்.

கடந்த மே மாதம் கையில் ஏற் பட்ட காயம் காரணமாக சமீபத்தில் நடைபெற்ற அமெரிக்க ஓபன் டென் னிஸில் அவர் பங்கேற்கவில்லை.

இவரும் அவுஸ்ரேலிய டென் னிஸ் வீரரான ஹெவிட்டும் கடந்த ஒரு ஆண்டு காலமாகக் காதலித்து வந்தனர். இவர்களுக்கு கடந்த வரு டம் டிசம்பர் மாதம் திருமணம் நிச் சயமும் நடைபெற்றது.

ஹெவிட் அமெரிக்க ஓபன் டென் னிஸ் இறுதிப் போட்டியில் பெடரரிடம் தேல்வி அடைந்தார். அவர் இதுவரை 23 பட்டங்களை வென்றுள்ளார். இதில் ஒரு கிராண்ட்ஸ்லாம் பட்டமும் அடங்கும்.

ஹெவிட்- கிலிஸ்டரின் திருமணம் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ளது. கிலிஸ்ரர் இதற் காக அவுஸ்ரேலிய குடியுரிமை பெறு வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள் ளார்.

# ஏ.பி.சி லீக் இறுதிச்சுற்றில் இடம்பெறவுள்ள அணிகள்

யாழ்.உதைபந்தாட்ட லீக் ஏற் பாட்டில் ஏ.பி.சி லீக் சுற்றுப்போட்டி யின் இறுதிச்சுற்றில் இடம்பெற வுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின விபரங்கள் அறிவிக்கப்பட டுள்ளன.

எதிர்வரும் 20 ஆம் திகதி பிற் பகல் 4 மணிக்கு 'பி' பிரிவில் சென் நிக்கலிஸ் 'பி' அணியை எதிர்த்து பல்கலைக்கழக அணியும், அன்று பிற பகல் 5 மணிக்கு 'ஏ' பிரிவில் சென் அன்ரனீஸ் 'ஏ' அணியை எதிர்த்து கலைவாணி 'ஏ' அணியும் மோதவுள்ளன.

எதிர்வரும் 21 ஆம் திகதி பிற்ப கல் 5 மணிக்கு 'ஏ' பிரிவில் பாடுமீன் 'ஏ' அணியை எதிர்த்து சென் நிக் கலிஸ் 'ஏ' அணியும் மோதவுள்ளன.

எதிர்வரும் 23 ஆம் திகதி பிற் பகல் 4 மணிக்கு 'பி' பிரிவில் பாடு மீன் 'பி' அணியை எதிர்த்து சென் நிக்கலிஸ் 'பி' அணியும் பிற்பகல் 5 மணிக்கு சென் நிக்கலிஸ் ஏ' அணியை எதிர்த்து கலைவாணி 'ஏ' அணியும் மோதவுள்ளன.

இதேவேளை எதிர்வரும் 24 ஆம் திகதி பிற்பகல் 5 மணிக்கு 'ஏ' பிரிவில் பாடுமீன் 'ஏ' அணியை எதிர்த்து சென் அன்ரனீஸ் 'ஏ' அணி மோதும். எதிர்வரும் 28 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு 'பி' பிரிவில் பாடுமன் 'பி' அணியை எதிர்த்து பல்க லைக்கழக அணியும் பிற்பகல் 5 மணிக்கு 'ஏ பிரிவில் பாடுமீன் 'ஏ' அணியை எதிர்த்து கலைவாணி 'ஏ' அணியும் மோதும்.

எதிர்வரும் 30 ஆம் திகதி பிற் பகல் 5 மணிக்கு 'ஏ' பிரிவில் சென் அன்ரனீஸ் 'ஏ' அணியை எதிர்த்து சென் நிக்கலிஸ் 'ஏ' அணி மோத வுள்ளது.

இந்தப்போட்டிகள் யாவும் யாழ். பொது விளையாட்டரங்களில் நடை பெறும் எனவும், போட்டி தொடங்கு வதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னர் மத்தியஸ்தரிடம் கழகங்கள் பதிவு களைச் செய்யுமாறும் யாழ். உதை பந்தாட்ட லீக்கின் ஏ.பி.சி லீக் சுற் றுப்போட்டிக்குழுவின் தலைவர் எஸ்.ரி.கணநாதன் தெரிவித்தார்.

# ஊனமுற்றோருக்கான ஒலிம்பிக் ஏதென்ஸில் ஆரம்பமானது!



ஊனமுற்றோருக்கான சர்வதேச ஒலிம்பிக் போட்டி கிறிஸ் நாட்டின் தலைநகர் ஏதென்ஸில் நேற்று கோலாகலமாக ஆரம்பமானது.

ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று முடிந்து 19 தினங்களின் பின்னர் ஊன முற்றோருக்கான ஒலிம்பிக் போட்டி கள் ஆரம்பமாகின. 11 நாட்கள் நடை பெறவுள்ள இந்தப் போட்டிகளில் உலகின் தலைசிறந்த ஊனமுற்ற வீரர்கள் பங்கேற்கின்றனர்.

146 நாடுகளைச் சேர்ந்த 4 ஆயி ரம் வீரர்கள் இந்தப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளனர். ஊன:முற் றோருககாக நடத்தப்படவுள்ள 18 போட்டிகளில் 15 போட்டிகளில் கலநதுகொள்வதற்காக பிரிட்டன் 166 வீர வீராங்கனைகளை கிறீஸுக்கு அனுப்பியுள்ளது. இறுதியாக நடந்த சிட்னி ஒலிம்பிக்கில் பிரிட்டன் 41 தங்கம், 43 வெள்ளி, 47 வெண்கலம் என 131 பதக்கங்களைச் சுவீகரித்தி ருந்தது.

இந்தமுறையும் அதிக பதக்கங்க ளைக கைப்பற்றும் நோக்குடன் பிரிட டன் தடகள மற்றும் நீச்சல் வீர வீராங்கனைகளை அனுப்பியுள்ளது. இந்த ஊனமுற்றோருக்கான ஒலிம் பிக் போட்டிகளில் வில்வித்தை, தட



களம், கூடைப்பந்து, சைக்கிளோட் டம், குதிரையோட்டம், வாள்ச் சண்டை, உதைபந்தாட்டம், ஜூடோ, படகோட் டம், துப்பாக்கி சுடுதல் நீச்சல், மேசைப்பந்து, டென்னிஸ் கரப்பந் தாட்டம் ஆகிய போட்டிகள் நடத்தப் படும்.

ஊனமுற்றோருக்கான ஒலிம்பிக் போட்டிகள் 1960 ஆம் ஆணடுமுதல் நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை இடமபெற்றுவருவது குறிப்பிடத் தக்கது.

# இந்திய அணியின் சொத்து கைஃவ் என்கிறார் கங்கூலி



(லண்டன்)

சமீபகாலத் துடுப்பாட்டப் பிரச்சி னைகள் எல்லாம் முடிவுக்கு வந்து மீண்டும் நாங்கள் புதுப்பொலிவுடன் ஆடத்தொடங்கியிருக்கிறோம். கடந்த இரு போட்டிகளில் தொடர்ந்து கிடைத்த வெற்றி எங்கள் தன்னம் பிக்கையை அதிகரிக்கச் செய்திருக் கிறது என கங்கூலி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது -

மினி உலகக் கிண்ணத்தில் கென்யாவுக்கு எதிரான வெற்றியும், முக்கியமான ஒன்று. மழையால் ஈரமாக இருந்த அந்த ஆடுகளத்தில் யார் நாணயச் சுழற்சியில் வென்றா லும் எதிரணியைத்தான் முதலில் துடுப் பெடுத்தாட அழைப்பார்கள். கென்யா வும் அதைத்தான் செய்தது.

ஒருவகையில் அது எங்களுக்கு நல்லதாக அமைந்துவிட்டது. எங் கள் துடுப்பாட்ட வீரர்கள் அனை வரும் கிடைத்த வாய்ப்பைப் பயன் படுத்தி அன்று சிறப்பாக ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

குறிப்பாக லக்ஷ்மன் மீண்டும் ஸ்கோர் செய்யத் தொடங்கிவிட்டார். ஆனாலும் விக்கெட்டுகளுக்கு இடையே அவர் ஓடும் வேகம் போதாது. அந்த வகையில் கைவ் ஆட்டம் மிக அருமை.

அன்றைய போட்டியில் முகமட் கை.்.வ் விளையாட்டை யாரும் மறக்கமுடியாது. துரிதமாக ஓட்டங் களைக் குவித்ததோடு, சிறப்பாகக் களத்தடுப்புச்செய்து அசத்திவிட்டார். ஒருநாள் போட்டிக்கான இந்திய அணியில் கணணை மூடிக்கொணடு தேர்வுசெய்யப்படவேண்டிய வீரர் அவர். விக்கெட்டுக்களுக்கு இடையே விரைவாக ஓடி ஓட்டங்களை எடுக்கக் கூடியவர். மொத்தத்தில் அவர் நமது அணியின் சொத்து.

ஷேவாக், யுவராஜ் இருவரும் இன்னும் தடுமாறுவது கவலையளிக் கிறது. அவர்கள் உடனடியாகச் சிறந்த ஆட்டத்துக்குத் தயாராகவேண் டும். காரணம் இந்தத் தொடரில் அடுத்து நாம் சந்திக்கவேண்டியது பாகிஸ்தானை. அதை மறந்துவிடக் கூடாது எனத் தெரிவித்தார்.

# சதுரங்க கருத்தரங்குகள் நடத்துவதற்கு ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சதுரங்க சம்மேளன ஏற்பாட்டில் சதுரங்கப் பயிற்சிக் கருத தரங்குகள் நடத்தப்படவுள்ளன. இன்று காலை 8.30 மணிக்கும், மாலை 5 மணிக்கும் கொக்குவில் இந்தக் கல் லூரியிலும் நாளை காலை 8.30 மணி முதல்' 12 மணிவரை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும், நாளை பிற்பகல் 2 மணிமுதல் மாலை 5. மணிவரை சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் நடைபெறவுள் ளன.

இந்தக் கருத்தரங்கில் இலங்கை சதுரங்க சம்மேளனத்தலைவரும், ஆசிய சதுரங்க சம்மேளனத்தின் செயலாளரும், தெற்காசிய சதுரங்க அக்கடமியின் முகாமைத்துவப் பணிப்பாளருமான டெரிக் வி.பெரேரா கருத்துரை வழங்குவார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# யாழிலிருந்து கண்டிக்கு சமாதான ஓட்ட நிகழ்வு!

யாழ்ப்பாணத்திலிருந்து தென்னிலங்கை நோக்கி சமாதான ஓட்டக் குழுவொன்று செல்லவுள்ளது.

யாழ்.பொது விளையாட்டு மைதானத்திலிருந்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்த ஓட்டமானது, யாழ். செயலகம்வரை நகர்ந்து, செயலகத்திலிருந்து பேருந்து மூலம் சாவகச்சேரி நகரை அடைந்து அங்கிருந்து சாவகச்சேரி இந்துக் கல்லூரிவரை ஓடிச்சென்று அங்கிருந்து ஆனையிறவு வரை பேருந்தில் சென்று அங்கும் சில கிலோமீற்றர்கள் ஓடிச்சென்று, பரந்தன் வரை பேருந்தில் செல்லவுள்ளனர்.

இவ்வாறாக வவுனியா, அனுராதபுரம், மாத்தளை என ஒவ்வொரு இடத்திலும் ஓட்ட நிகழ்வுகளை நடத்தி, அங்கிருந்து கண்டி போகம்பரை மைதானத்தை அடைந்து, அங்கு இறுதிநாள் நிகழ்வுகள் 27 ஆம் திகதி நடைபெற்று, மீண்டும் யாழ்ப்பாணத்திற்குத் திரும்பவுள்ளனர்.

இந்த சமாதான ஓட்டத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 30 வீரர்களும், 10 வீராங்கனைகளும் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ப)

# ஏ-9 வீதியை வழிமறித்து போராட்டம் நடத்த முஸ்தீபு!

(யாழ்ப்பாணம்)

உயர்பாதுகாப்பு வலயங்களில் உள்ள தமது இருப்பிடங்களில் இருந்து படையினர் வெளியேற வேண்டுமெனக்கோரி வலிகாமம், தென்மராட்சி மக்கள் ஏ-9 வீதியில் வழிமறிப்புப் போராட்டத்தை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மக்களின் வழிமறிப்பு போராட்டத்திற்கான ஒழுங்குகளை தாம் மேற்கொண்டு வருவதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான நடராஜா - ரவிராஜ் தெரிவித்தார்.

உயர்பாதுகாப்பு வலயங்களில் இருந்து படையினர் வெளியேறி மக்களை மீள் குடியமர வழிசமைக்குமாறு பல தடவைகள் அரசாங்கத் தரப்பிற்கு பல அழுத்தங்கள் கொடுக்கப்பட்டபோதும் அவற்றால் எவ்வித பயனும் ஏற்படாத நிலையிலேயே இந்த புதிய முயற்சிக்கு தாம் தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (01)

## விபத்தில் போராளி சாவு!

(கிளிநொச்சி)

பளையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தவறுதலான விபத்தொன்றில் போராளி ஒருவர் சாவடைந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கப்டன் இளங்கோவன் என்று அழைக்கப்படும் 7 ஆம் வாய்க்கால், கிளிநொச்சியைச் சேர்ந்த சுப்பையா சிவநாதன் என்ற போராளியே சாவடைந்தவராவார்.

இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை செலுத்துகின்றனர்.

## வட- கிழக்கு மாகாண மட்ட தமிழ்மொழித் தினப் போட்டி!

### இன்று திருமலையில் ஆரம்பம்

மாகாணமட்ட தமிழ் மொழித் தினப்போட்டி இன்று திருகோணமலையில் ஆரம்பமாகிறது.

போட்டியில் பங்கேற்கும் வட-கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து மாவட்டத்திலிருந்தும் மாணவர்கள் திருமலை சென்றுள்ளனர்.

இன்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்தப் போட்டியில் காலை தமிழ்த்தினப் போட்டியும், மாலை நாட்டுக்கூத்துப் போட்டியும் நடைபெறவுள்ளன.

நாளை தமிழ்த்தினவிழாவும், பரிசளிப்பு நிகழ்வும் இடம் பெறவுள்ளன.

திருமலை நகரிலுள்ள 5 பாடசாலைகளில் தமிழ்மொழித் தினப் போட்டி நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளதாகவும் மாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.(04)

# வெளிநாடுகள் நிதியுதவிகளை நிறுத்தி பிரச்சினையைத் தீர்க்க முயலவேண்டும்!

## யு.என்.டி.பி. அதிகாரிகளிடம் யாழ்.பிரமுகர்கள் வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

உலகநாடுகள் அனைத்தும் இலங்கை அரசாங்கத்துக்கு பணத்தைக் கொடுத்து இங்குள்ள பிரச்சினைகளை மூடிமறைக்கின்றன. எனவே இலங்கை அரசுக்கு நிதியுதவி வழங்குவதை உலகநாடுகள் நிறுத்தி இங்குள்ள பிணக்குகளைத் தீர்க்க முன்வரவேண்டும் என தாம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட அலுவலர்களுக்கு வலியுறுத்தியிருப்பதாக கியூடெக் நிறுவன இயக்குநர் ஜெயக்குமார அடிகளார் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தைச் சேர்ந்த பேராசிரியர் அர்சுண பராக்கிரம தலைமையிலான குழுவினர் நேற்று யாழ்குடாநாட்டிற்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தனர்.

இவர்கள் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் மதியம் 2.30 மணியளவில் - யாழ்.மனித உரிமை ஆணைக்குழு இணைப்பாளர் றோகன சந்திரசேகர, மனிதநேய அமைப்பைச் சேர்ந்த பரமநாதன், சமாதான பேரவைத் தலைவர் அருட்தந்தை பேணாட் அடிகளார், மகளிர் அபிவிருத்தி நிலைய இயக்குநர் சறோஜினி சிவச்சந்திரன் ஆகியோரைச் சந்தித்தார். இந்தச் சந்திப்புத் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே கியூடெக் நிறுவன இயக்குநர் அருட் திரு ஜெயக்குமார் அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் - உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக அவர்களுக்கு விளக்கியுள்ளோம். அங்கு மக்களின் உரிமைகள் பல மீறப்படுகின்றன.

விவசாயம், மீன்பிடி போன்ற தொழில்களைச் சுதந்திரமாகச் செய்ய முடியாத நிலையும் மாணவர்கள் தமது கல்வியை மேற்கொள்ளமுடியாத நிலையும் தோன்றியுள்ளது.

விடுதலைப் புலிகள் மனித உரிமை மீறும் செயல்களில் ஈடுபடுகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றபோதும், இராணுவத்தினர் செய்கின்ற மனித உரிமை மீறல் செயல்களை அரசு பொருட்படுத்துவது இல்லை.

இதைவிட பல பிரதேசங்களில் வசிக்கும் மக்களின் வீடுகள், உயர் பாதுகாப்பு வலயத்தில் காணப்படுகின்றமையினால் அந்த மக்கள் 15 வருடங்களுக்கு மேலாக வாடகை வீடுகளில். தங்கி வருகின்றனர்.

இவர்களுக்கு அரசு வாடகை வழங்க வேண்டும். மக்களுக்குத் தகுந்த முறையில் இதுவரை நஷ்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை. இவை போன்ற பல்வேறு விடயங்களை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட அலுவலருக்கு விளக்கியுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த விடயங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட அலுவலகம் கவனம் எடுத்து செயற்படும் எனத் தெரிவித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வித்துடல் விதைப்பு!

முல்லைத்தீவில் இடம்பெற்ற வெடிவிபத்தொன்றில் வீரச்சாவடைந்த சங்கானை - விழிச்சுட்டியைச் சேர்ந்த வீரவேங்கை அன்புச்சிட்டு (ஆனந்தராசா அஜிந்தா) என்ற போராளியின் வித்துடல், சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நேற்றுக் காலை 11 மணியளவில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பாடசாலை அதிபர் ச.கைலாசநாதன் தலைமையில் வீரவணக்கக் கூட்டம் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் போராளிகள், மாணவர்கள், பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டு மாவீரரின் பூதவுடலுக்கு தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

இந்த அஞ்சலி நிகழ்வில், ஈகச்சுடரை மாவீரர் அன்புச்சுடரின் பெற்றோர் ஏற்றிவைத்தனர். மலர்மாலையை புலிகளின் முக்கியஸ்தர்கள் அணிவித்தனர். இதனைத் தொடர்ந்து நினைவுரையை யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி நிகழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் எடுத்துவரப்பட்ட மாவீரர் வீரவேங்கை அன்புச்சிட்டுவின் வித்துடல், நண்பகல் 1 மணியளவில் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.(47)

## ரணிலுடன்....

வர் எரிக் சொல்ஹெய்ம் நேற்றுமுன்தினம் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழச்செல்வனையும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவையும், சந்தித்து சமாதான நடவடிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடியிருந்தார்.

இந்தப் பேச்சுக்களின் மூலம் சமாதானப் பேச்சுக்கள் குறித்த எந்த இணக்கப்பாடும் உருவாக்கப்படாத நிலையிலேயே சொல்ஹெய்ம் நேற்று நாடு திரும்பினார்.

## ஒருங்கிணைப்பு....

இங்கு ஒவ்வொருவரும் முன்வைத்த கோரிக்கைகள் பல கோடி ரூபாய் தேவையை உணர்த்துகின்ற போதிலும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் ஒரு சில தேவைகளை மட்டுமே பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்குமென அங்கு கூடியிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினருக்கான இந்த நிதியில் ஒரு கோடி ரூபா வரை கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்கும் மிகுதி 3 கோடி ரூபா யாழ். மாவட்ட அபிவிருத்திக்கும் ஒதுக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. பெண்கள் அபிவிருத்தி முன்பள்ளி வளர்ச்சி, வீதி அபிவிருத்தி, கல்வி விளையாட்டு இடம்பெயர்ந்தோர் அபிவிருத்தி, சுகாதாரம் முதலான துறைகளுக்கே அதிக நிதி செலவிடப்படவுள்ளது.

இன்றைய தினமும் இந்தக் கூட்டம் நடைபெற்று அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (ப)

# சி.பி.ரத்னாயக்கா மீண்டும் அமைச்சராக பதவியேற்பு!

மத்திய மாகாண சிறிய பெருந்தோட்டக் கைத்தொழில், கிராமிய மனிதவள அமைச்சராக சி.பி.ரத்னாயக்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசியல் யாப்புக்கு அமைய இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்ட சி.பி.ரத்னாயக்க, ஜனாதிபதி சந்திரிகா முன்னிலையில் நேற்றுப் பிற்பகல் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் முன்னர் தோட்ட சமூக உட்கட்டமைப்பு அமைச்சராகப் பதவி வகித்து வந்தார். எனினும், இந்த அமைச்சுப் பொறுப்பு இலங்கை தொழிலாளர் காங்கிரஸை சேர்ந்த முத்து சிவலிங்கத்துக்கு வழங்கப்பட்டதன் பின்னர், புதிய அமைச்சு நேற்று அவருக்கு வழங்கப்பட்டது.

# பல்கலைக்கழக ஊழியர்களின் போராட்டத்துக்கு விரைவில் தீர்வு!

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு விரைவில் தீர்வுகாணமுடியும் என நகர அபிவிருத்தி அமைச்சரும் உயர்கல்வி பிரதி அமைச்சருமான தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

கலவிசாரா ஊழியர்களின் வேலை நிறுத்தப்போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக விசேட பேச்சுவார்த்தை ஒன்று நேற்று நடத்தப்பட்டது.

இந்தப் பேச்சுக்களின்போது அரசதரப்பால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக தமது தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடிய பின்னரே கருத்துக்கள் வெளியிடப்படும் என அனைத்துப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளாது.

# சட்டவிரோதமாக லண்டனுக்கு...

இவர்களைக் குற்றப்புலனாய்வுத் துறையினர் கைதுசெய்து விசாரித்த போது இங்கிலாந்துக்கான போலி விமானச் சீட்டுடன் விசாவும் கைப்பற்றப்பட்டது.

இத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகள் நீண்ட காலமாக நடைபெற்று வருகின்றபோதிலும், நேற்றுத்தான் முதற்தடவையாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இவர்களை லண்டனுக்கு கொண்டு செல்வதற்காக ஏற்பாடு செய்ததாகக் கருதப்படும் சிறிலங்கா எயார் லைன்சைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவரையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

# மரண அறிவித்தல்



**கனகரத்தினம் கருணாநிதி (கருணா)**

*(முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர், லங்கா சிமெந்து லிமிட்டெட்)*

வீமன்காமம் வடக்கு - தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் இல.13/2, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கனகரத்தினம் கருணாநிதி நேற்று (17.09.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் - ஆச்சிக்குட்டி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராஜகோபால் - பராசக்தி தம்பதியினரின் மருமகனும் சுகுணவதி (ரதி) யின் பாசமிகு கணவரும், தேனுகா (இலங்கை வங்கி மேற்றரக்கிளை - யாழ்ப்பாணம்), கோணேஷ் (கட்டார்), தேனுஷா (மாணவி, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், கோகுலன் (ஆசிரியர், யா/செங்குந்த இந்துக் கல்லூரி) அவர்களின் மாமனாரும் தீனசரணின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனகசபாபதி லேன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் என்னும் முகவரியில் நாளை (19.09.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் வேண்டுகிறோம்.

*கனகசபாபதி லேன்,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்* (சி-3145)

தகவல்:
**க.கோணேஷ்**
**(மகன்)**

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.09.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.